வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 25.11.2021 வியாழக்கிழமை | இதழ் : 355 | பக்கங்கள் : 16

### உள்நாட்டு பொறிமுறை திட்டங்களால்

# நல்லிணக்கம், மனித உரிமைகளில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது

### ஐ. நாவின் உதவி செயலரிடம் கூறினார் பீரிஸ்



கொழும்பு, நவம்பர் 25

உள்நாட்டு பொறிமுறைகளால் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கை வந்துள்ள ஐ. நாவின் அரசியல், சமாதானத்தை கட்டியெழுப்பும் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கான உதவி செயலாளர் காலித் கியாரி நேற்று புதன்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸை சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். **15**

## 58 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

### 41 ஆயிரம் ரூபாய் மாத சம்பளம்

கொழும்பு, நவ. 25

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க **15**

## தாவடியில் விபத்தை ஏற்படுத்திய பஸ் இலக்கத்தகடு இன்றி எப்படி பயணித்தது?

### பாராளுமன்றத்தில் சிறீதரன் கேள்வி

கொழும்பு, நவ. 25

யாழ் தாவடி சந்தியில் விபத்தை ஏற்படுத்திய இலக்கத்தகடு இல்லாத இராணுவத்தின் பஸ்ஸை தம்முடைய பஸ் இல்லையென இராணுவத்தினர் மறுக்கின்றனர். அப்படியானால் ஒரு இலக்கத் தகடு இல்லாத பஸ் யாழ் நகரின் பல பகுதிகளுக்குள்ளும் பயணித்த நிலையில் அதனை பொலிஸார் ஏன் **15**

## கிளிநொச்சி டிப்போ சந்தியில் சுற்றுவட்ட பாதை அமையுங்கள்

### நெடுஞ்சாலை அமைச்சருக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு, நவ. 25

கிளிநொச்சி டிப்போ சந்தியில் சுற்றுவட்டப் பாதை அமைக்கும் சிறீதரன் எம்,.பி.யின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தர **15**

## கொரோனாத் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 25

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழந்தனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர் **15**

## ஐ. நாவின் நிபுணர் ரொமோயா நாளை இலங்கை வருகின்றார்!



கொழும்பு, நவ. 25

தற்கால அடிமை முறைகள் பற்றிய ஐ. நாவின் சிறப்பு அறிக்கையாளர் ரொமோயா ஒபோகோடா நாளை வெள்ளிக்கிழமை இலங்கை வருகின்றார்.

டிசெம்பர் 3ஆம் திகதி **15**

## ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வடக்கில் முன்னெடுக்கவில்லை!

### இராஜாங்க அமைச்சர் விதுர

கொழும்பு, நவ. 25,

வடக்கில் நாங்கள் ஆக்கிரமிப்புகளையோ, பலவந்தமான குடியேற்றங்களையோ எந்த வகையிலும் முன்னெடுக்கவில்லை. பாதுகாக்க வேண்டியவற்றை பாதுகாக்கும் நடவடிக்கையிலேயே **15**

## பருத்தித்துறை பிரதேச சபையின் அமர்வில் பங்கேற்றவருக்கு தொற்று

வடமராட்சி, நவ. 25

பருத்தித்துறை நகர சபையின் வரவு - செலவு திட்ட வாக்கெடுப்பில் பங்கேற்ற உறுப்பினர் ஒருவருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை **15**

## அதிக மழை மற்றும் காற்றால் காரைநகரில் 632 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 25

யாழப்பாணத்தில் நேற்று நிலவிய சீரற்ற வானிலையால் 183 குடும்பங்களைச் சேர்ந்த 632 பேர் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளனரென மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று மாலை வரையான நிலவர அறிக்கையின்படி, **15**

## மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் புதிய சட்டத்தின் கீழ் நடத்தப்படும்

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்

கொழும்பு, நவ. 25

புதிய சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், மற்றும் கிராமிய கலை நுட்ப, மேம் **15**

### ‘தமிழர் தேசம்’, ‘தேசிய தலைவர் பிரபாகரன்’

## கஜேந்திரன் எம். பியின் விளிப்பால் கொந்தளித்தது பாராளுமன்றம்

கொழும்பு, நவ. 25

‘தமிழர் தேசம்’, ‘தேசிய தலைவர் பிரபாகரன்’ என்று கஜேந்திரன் எம். பி. பாராளுமன்றில் விளித்த வார்த்தைகளால் ஆளும் கட்சியினர் வெகுண்டெழுந்தனர். இந்த வார்த்தைகளை உடனடியாக ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று சபைக்கு தலைமை தாங்கிய வேலுகுமார் எம். பியிடம் கோரினர். ஆனால், அதற்கு அவர் மறுத்துவிட்டமையால் சபையில் கொந்தளிப்பு ஏற் **15**




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## மாகாண...

பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாத்தின் போது, ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அந்த விவாதத்தில் உரையாற்றிய ரஞ்சித் மத்துமபண்டார கூறுகையில், மாகாணசபை தேர்தலுக்கு செல்ல அரசாங்கம் அஞ்சுகிறது. மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துவதாக தெரிவித்தே ஆட்சிக்கு வந்த அரசாங்கம், 2 வருடமாகியும் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் எம்மை குறைகூறி வருகின்றது. மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு சபைக்கு சமர்ப்பித்தால் அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். அத்துடன் அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலையும் 2வருடங்களுக்கு பிற்போட நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்றார்.

இதன்போது பதிலளித்த சபை முதல்வர் தினேஸ் குணவர்தன கூறுகையில், நடைமுறை சட்டத்திற்கிணங்க மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மாகாணசபை தேர்தலை நடத்த புதிய சட்டம் இயற்றுமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. எமது முன்னாள் ஜனாதிபதியும் அது தொடர்பில் நீதிமன்றம் சென்றிருந்தார். அந்த வகையில் புதிய சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு நாங்கள் இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளோம். இதன்படி புதிய சட்டம் ஒன்றை உருவாக்கி மாகாணசபை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம். உங்களது காலத்தில் நீங்கள் செய்த தவறை நாங்கள் நிவர்த்தி செய்வோம் என்றார்.

## நல்லிணக்கம்,...

வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் பயங்கரவாத தடை சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் உட்பட நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக உள்நாட்டு செயல்முறைகளில் ஏற்பட்டுள்ள சமீபத்தைய முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அமைச்சர் இதன்போது கூறினார்.

அத்துடன், தாமாக ஏற்றுக்கொண்ட சர்வதேச கடமைகளுக்கு அமைவாக நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் அடைவதற்காக ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை தொடர்ந்து ஒத்துழைக்கும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார் என்று கூறப்பட்டது.

இந்த சந்திப்பில் காலித் கியாரியுடன் ஐ. நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் - ஹம்டி மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பருத்தித்துறை...

நகரசபையின் வரவு செலவுத் திட்டம் தவிசாளரால் நேற்று முன்வைக்கப்பட்டது. வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஒரு மேலதிக வாக்கினால் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 5 பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சுயேட்டை ஆகியவற்றின் உறுப்பினர் தலா ஒருவர் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் ஆறு பேரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.

அதனால் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் சமநிலை காணப்பட்டது. இதனால், உள்ளூராட்சி மன்றச் சட்டத்துக்கு அமைய தவிசாளர் தனது வாக்கை ஆதரவாக அளித்து ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் போது கலந்துகொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் உடல்நலக் குறைவுடன் காணப்பட்டுள்ளார்.

அவர் வாக்கெடுப்பின் பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனால் அவர் மருத்துவமனை கோவிட்-19 விடுதியில் சிகிச்சை பெறுகின்றார்.

முன்னதாக இவர் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கூட்டத்திலும் பங்கேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2-3)

## ஆக்கிரமிப்பு...

ஈடுபடுகின்றோம் என்று தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை குழு நிலை விவாத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

"வடக்கை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி முன்வைக்கும் குற்றச்சாட்டாக தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களை பௌத்த மயமாக்க முயற்சிப்பதாக கூறுகின்றனர். நாங்கள் பாதுகாக்க வேண்டியவற்றை காக்கத் தயார். அதனை தமிழ், சிங்கள, முஸ்லிம் என்றோ அல்லது இந்து, கிறிஸ்தவர், இஸ்லாம் என்றோ பாதுகாக்கவில்லை. இலங்கை என்ற ரீதியிலேயே அதனை செய்கின்றோம்.

ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு பலவந்தமாக மக்களை குடியேற்றவோ, பலவந்தமாக விகாரைகளை அமைக்கவோ நாங்கள் முயற்சிக்கவில்லை. கடந்த கால மரபுரிமைகளை மீள தேசத்துக்கு வழங்குவதற்கான பணியே தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனை தவிர, தமிழ் மக்களின் வாழ்விடங்களையோ அல்லது விவசாய இடங்களை பலவந்தமாக பெற்றுக்கொள்ளவோ எங்களுக்கு அவசியமில்லை. அடிக்கடி இது தொடர்பாக கருத்து கூறுகின்றனர். இதற்கு நிறுத்தம் இருக்க வேண்டும். நாங்கள் நட்புறவுடனேயே கரத்தை நீட்டுகின்றோம்", என்றார்.

## அதிக மழை...

நேற்று காலை முதல் பெய்த கனமழை மற்றும் வேகமான காற்றால் காரைநகரில் 183 குடும்பங்களை சேர்ந்த 632 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இரு குடும்பங்கள் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஐ. நாவின்...

வரை நாட்டில் தங்கியிருக்கும் அவர், ஆடைத் தொழில்சாலை, தேயிலை தோட்டங்கள், சுற்றுலா மற்றும் வீட்டு வேலை உள்ளிட்ட பல்வேறு பொருளதார துறைகளில் உள்ள தொழிலாளர்களின் நிலைமைகள் குறித்து ஆய்வு செய்வார்.

நாட்டில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட ஒழுக்கமான வேலைக்கான அணுகலை தடுக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள், முறையான தடைகளை நடைமுறைப்படுத்தலை மதிப்பிடவும் விசேட அறிக்கையாளர் உத்தேசித்துள்ளார்.

நிலையான அபிவிருத்தியின் இலக்கான 8.7ஐ அடைவதற்கு இலங்கை அரசாங்கம் செய்துள்ள அர்ப்பணிப்புகளின் வெளிச்சத்தில் இந்த விடயத்தில் எந்தளவு முன்னேற்றம் எட்டப்பட்டது. எத்தகைய குறைபாடுகள் நீடிக்கின்றது. அவற்றை எவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தீர்க்கலாம் என்பது குறித்தும் அவர் ஆராய்வார் - என்று தெரியவருகின்றது. (ஐ)

## கஜேந்திரன்...

பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற குழு நிலை விவாதத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உரையாற்றினார். அவரின் உரையில் அடிக்கடி "தமிழர் தேசம்", "தேசிய தலைவர் பிரபாகரன்" என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன.

இதனால், கோபமடைந்த இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல ஒழுங்குப் பிரச்னை எழுப்பி, "இந்த உயர் சபையில் தேசியத் தலைவராக பயங்கரவாத தலைவரின் பெயரை குறிப்பிட்டுள்ளார். தலைமை தாங்கும் உங்களுக்கு (வேலுகுமார் எம். பி.) இந்த மொழி புரிந்திருக்கும். இதனால் இதனை ஹன் சாட்டில் இருந்து நீக்குங்கள்", என்றார்.

இதற்கு பதிலளித்த சபைக்கு தலைமை தாங்கிய வேலுகுமார் எம். பி, "அது அவரின் கருத்து வெளியிடும் உரிமையே, அதற்கு என்னால் இடையூறு செய்ய முடியாது. உங்களுக்கு கோரிக்கை இருந்தால், நான் அதனை சபாநாயகரிடம் முன்வைக்கின்றேன்", என்றார்.

இதன்போது எழுந்த அரசதரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் முஸம்மில், "விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாகும். இந்த நாட்டில் இலட்சக்கணக்கில் மக்களை கொன்றவரை வீரராக கூறி இந்த சபையில் கருத்து வெளியிட முடியாது. இது அவரின் கருத்து இல்லை. இது இனவாதத்தை உண்டாக்குவதாகும். இதனை சபைக்குள் கொண்டு வரமுடியாது. தயவு செய்து அந்தக் கருத்தை ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள், நீங்களே இப்போது சபைக்கு தலைமை ஆசனத்தில் இருக்கின்றீர்கள். இதனால் நீங்கள் ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள்", என்றார்.

## தாவடியில்...

சோதனை சாவடிகளில் மறிக்கவோ சோதனையிடவோ இல்லையென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ். சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி தாவடி சந்தியில் பாடசாலை மாணவியை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிளை இலக்கத்தகடு இல்லாத இராணுவ பஸ் மோதியதில் மாணவி படுகாயமடைந்த நிலையில் அவரின் தந்தையும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய இராணுவ பஸ்ஸில் எந்த சைகை விளக்குகளோ ஒலி எழுப்பியோ இருக்கவில்லை. அத்துடன் பஸ்ஸின் முன்பக்கம், பின்பக்கம் என இரு பக்கங்களிலும் இலக்க தகடுகளும் இருக்கவில்லை. இருந்தபோதும் இந்த பஸ் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பதிவின்படி இராணுவ தலைமையக பதிவைக்கொண்டுள்ளது.

விபத்து நடந்த இடத்துக்கு வந்த இராணுவத்தினர் இது தம்முடைய பஸ் அல்லவென தெரிவித்திருக்கின்றனர். ஆனால், இந்த பஸ்ஸிலே வற்றாப்பளை கண்ணகை அம்மன் என எழுதப்பட்டுள்ளது. யுத்தம் முடிந்த காலத்தில் மக்களின் இந்த பஸ்ஸை தம்மகப்படுத்திய இராணுவத்தின் இராணுவ தலைமையகத்தின் பெயரிலே வைத்திருந்த நிலையிலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இலக்கத் தகடு இல்லாத இந்த இராணுவத்தின் பஸ் யாழ்ப்பாணம் ஆரிய குளம் சந்தியிலிருந்து கே.கே.எஸ். வீதியூடாக இணுவில் வரையும் பயணம் செய்துள்ளது. எந்த இடத்திலும் பொலிஸார் இந்த இலக்கத்தகடு இல்லாத பஸ்ஸை மறித்து சோதனையிடவில்லை. இவ்வாறு சென்ற பஸ்தான் இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

இதற்கு வேலுக்குமார் எம்.பி, "எனக்கு சபாநாயகரிடம் முன்வைக்கும் நிலையியல் கட்டளையே உள்ளது. அதன்படி அதனை அவரிடம் முன்வைக்கின்றேன்", என்றார்.

இதைத் தொடர்ந்து எழுந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. ஒரு தரப்பு சார்ந்த கருத்துக்களை கூறுகையில் அதனை பெரும்பான்மை சமூகம் விரும்பவில்லை என்றால் அதனை தடுக்க முயலக்கூடாது என்பதுடன், அவரை மௌனிக்கச் செய்யவும் வேண்டாம்", என்றார்.

இதனையடுத்து அரச தரப்பின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எழுந்து, "இந்த பாராளுமன்றத்தில் சிறப்புரிமைகளை இவ்வாறான விடயங்களுக்காக பயன்படுத்த முடியாது. பயங்கரவாத தலைவரை தேசியத் தலைவராக எந்தப் பாராளுமன்றத்திலாவது கூறுவார்களா? அதற்கு அனுமதி வழங்க வேண்டாம். இவர்கள் பிரபாகரனை நெல்சன் மண்டேலா, மகாத்மா காந்திக்கு சமாந்திரமாக கூற முற்படுகின்றனர். ஆனால் அவர் பயங்கரவாத தலைவரே", என்றார்.

இதனையடுத்துத்தனது பேச்சைத் தொடர்ந்த கஜேந்திரன் எம். பி., "ஒன்றைக் கூறிக்கொள்கின்றேன். அதாவது நாடு அழிவுப் பாதையில் செல்கின்றது. வீடு கொளுத்துகிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கின்ற மந்திரிகளாக நீங்கள் இருக்க வேண்டாம் என்று கேட்கின்றேன்", என்றார்.

## கொரோனாத்...

களில் 11 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 205 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## கிளிநொச்சி...

விட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை குழு நிலைவிவாதத்தில் உரையாற்றிய சிறீதரன் எம்.பி. டிப்போ சந்தியில் சுற்று வட்ட சந்தியை அமைத்து சைகை விளக்குகளை பொருத்துமாறு தான் பலதடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருக்கு கடிதம் எழுதியும் அது இன்னும் நிறைவேற் றப்படவில்லை எனவும் தயவு செய்து முதலில் அதனை நிறைவேற்றுங்கள் என சபையில் இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது எழுந்த நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கிளிநொச்சி பிரதேசத்தின் போக்குவரத்து பிரச்சி னைகளை உடனடியாக தீர்க்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எனக்கு இப்போது பணிப்புரை விடுத்துள்ளார், உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும் - என்றார்.

## 58 ஆயிரம்...

தெரிவித்தார்.

நிரந்தர நியமனம் வழங்கப்படுவோருக்கு மாதாந்தம் 41,000 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் என பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட சுமார் 58,000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கோவிட் தொற்று காரணமாக பட்டதாரிகளுக்கு வழங்கப்படவிருந்த தொழில் பயிற்சிக்கு இடையூறு ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஒரு இலட்சம் காணி துண்டு வழங்கல்; நல்லூரில் நேர்முக தேர்வு நாளை முதல்

யாழ்ப்பாணம், நவ. 25

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் காணி துண்டங்கள் வழங்குவதற்கான பயனாளிகளை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் நாளை ஆரம்பமாகின்றது.

இந்த நிலையில், நல்லூர் பிரதேச செயலகத்தில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒரு இலட்சம் அரச காணி துண்டுகள் வழங்கும் நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகின்றது. காணி துண்டுக்காக விண்ணப்பத்தவர்களில் ஒரு குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கேனும் நேர்முக கடிதம் கிடைக்காதோர் எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் டிசெம்பர் 3ஆம் திகதி வரை நேர்முக தேர்வுக்கு தோற்ற முடியும். இவர்கள் நல்லூர் பிரதேச செயலக காணி பயன்பாட்டு திட்டமிடல் கிளைக்கு நேர்முகத் தேர்வுக் கான ஆவணங்களுடன் சமுக மளிக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும்போது, ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் - தேசிய அடையாள அட்டை, அதன் நிழல்பிரதி (தே. அ. அட்டை இல்லையெனின் வெளிநாட்டு கடவுச்சீட்டு), வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் வழங்கிய சான்றிதழ், தொழில் முயற்சியைத் தொடங்குவதற்கு தமக்கு சொந்தமாக காணி இல்லையெனில் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு சத்தியக் கடதாசி.

தொழில்முயற்சி தொடர்பான கருத் திட்ட அறிக்கை (கருத்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்), புதிதாக தொழில் முனைவராயின் தொடங்குவதற்கு எதிர்பார்க்கும் தொழில் முயற்சி தொடர்பாக முழுமையான விபரங்கள் உள்ளடக்கிய கருத்திட்ட பிரேரணை அறிக்கை, தற்போது தொழில் முயற்சியை பேணுவோராயின் அது தொடர்பாக முழுமையான விபரங்களும் தீர்த்துக் கொள்வதற்குப் பிரச்னைகள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய அறிக்கை, உரிய அறிக்கைகள் மூலம் தங்கள் தொழில் முயற்சி ஆற்றல் தொடர்பாக விட யங்களை சர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிறீஸ்கந்தராஜா இந்திராதேவி

**பிறப்பு: 13.03.1966** **இறப்பு: 19. 11.2021**

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்கள் 19.11.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னலட்சுமி(கனடா) தம்பதியரின் அன்பு மருமகளும்,சிறீஸ்கந்தராஜா அவர்களின் அன்பு மனைவியும், ஜனகன், ஜனித், தர்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற நாகம்மா, பொன்னம்பலம்(மாதகல்), செல்வராசா (மீசாலை), காலஞ்சென்ற புனிதராணி, அன்னலட்சுமி(வவுனியா), ஆனந்தராசா(கனடா), மோகனராசா (லண்டன்), கலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற நடராஜா, விம லாதேவி (மாதகல்), பவா(மீசாலை), காலஞ்சென்றவர்களான அமிர் தலிங்கம்(துரை), ஞானகுரு மற்றும் புனிதவதி (கனடா), ஈஸ் வரி(லண்டன்), சந்திரசேகரன்(கனடா), சுலோஜனா(கனடா), கிருஷ்ண தேவராஜா(கனடா), இந்திராணி(கனடா), காலஞ்சென்ற நிர்மலேஸ்வரன், இராசேந்திரம், சசீலா, கோகுலராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 23 Nov 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada
கிரியை
Wednesday, 24 Nov 2021 1:30 PM - 4:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham,ON L3R 5G1, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சிறீஸ்கந்தராஜா (கணவர்)** Mobile : +16472390276

தகவல் :
**குடும்பத்தினர்.**

### திருமதி தவபாக்கியம் தருமலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)



**பிறப்பு: 11.11.1934** **இறப்பு: 19. 11.2021**

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், மலேசியா, யாழ்ப்பாணம், பிரான்ஸ் Paris, பிரித்தானியா லண்டன் Coulsdon ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தவபாக்கியம் தருமலிங்கம் அவர்கள் 19-11-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்,தருமலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,சிறீதரன், வசந்தா, சாந்தா, மோகன், கீதா, வரதா ஆகியோரின் அன்புத் தாயாரும்,வைஷ்ணவி, பவித்ரா, சத்தியா, சாரங்கா, அர்ச்சனா, சாம்பவி, வைதேகி, பிரவின், லக்ஷ்மன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும்,ஜெயரேகா, வித்தியாகரன், அரிச்சந்திரன், லிங்கன், நிரஞ்சகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான யசோதா, இந்திரா மற்றும் சமுத்திரரட்னம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,யோகரட்னம், சத்தியரூபவதி, காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, குமாரசாமி, யோகம்மா, துரைராஜா மற்றும் இலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,அஜந்தா அவர்களின் பாசமிகு பெரியம்மாவும்,சுபோதினி, ஷாமினி, செந்தூரன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

கிரியை
Thursday, 25 Nov 2021 3:45 PM - 4:15 PM
Croydon Cemetery Mitcham Rd, London CR9 3AT, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சிறீதரன் (மகன்)** Mobile : +447793583766

தகவல் :
**குடும்பத்தினர்.**

## வடமாகாண மரநடுகை மாதம் 25 கார்த்திகை 2021

**"இயற்கையே எனது இறைவன் எனக்கு இயற்கை புனிதமனது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்"**

- மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)

### கல்வி TV CHANNEL-1 — 25.11.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 25.11.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
25.11.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## சம்பந்தனின் தடுமாற்றம் தீருமா?

ஆசிய அரசியல் விவகாரங்களுக்கான, ஐ. நாவின் உதவி பொதுச் செயலாளர், காலித் ஹியார், இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றார். சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் அவருடன் கலந்துரையாடியிருக்கின்றனர். இதன்போது புதிய அரசியல் யாப்பு தொடர்பில் சம்பந்தன் தனது அவதானங்களை தெரிவித்திருக்கின்றார். அரசாங்கம், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு தயாராக இல்லை. அதன் நடவடிக்கைகள் இதனைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

எனவே, புதிய அரசியல் யாப்பும் வரப் போவதில்லை - ஒருவேளை அரசியல் யாப்பு வந்தாலும்கூட - அது கடுமையான சிங்கள - பௌத்த நிலைப்பாட்டை கொண்ட ஒரு யாப்பாகவே இருக்குமென்றும் தெரிவித்திருக்கிறார். சம்பந்தன் இப்போது கூறியிருப்பதை, ‘ஈழநாடு’ தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றது. அதேவேளை, இதன் காரணமாகத்தான் தற்போது அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் வலியுறுத்தியிருந்தோம்.

புதிய அரசியல் யாப்பு வந்தாலும், அது நிச்சயம், கடும்போக்கு வாதத்திற்கு தீனிபோடும் ஒரு முயற்சியாகவே இருக்குமென்றும் நாம் எச்சரித்திருந்தோம். தென்னிலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் எம்மிடம் ஆழமான அவதானங்கள் இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த விடயங்களை ‘ஈழநாடு’ அவ்வப்போது வலியுறுத்தி வந்திருக்கின்றது. நாம் கூறியவற்றை ஆமோதிக்கும் வகையிலேயே, தற்போது சம்பந்தனின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

ஆனால், இவ்வாறு கூறியிருக்கும் சம்பந்தன் மறுபுறம் யதார்த்தத்தை உணர்ந்து விடயங்களை கையாளவும் மறுத்து வருகின்றமைதான், இதிலுள்ள முரண்நகையான விடயமாகும். பங்காளிக் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற யாழ். சந்திப்பை தமிழ் அரசு கட்சி புறக்கணித்திருந்தது. இந்த நிலையில் சம்பந்தனையும் இணைத்துக் கொண்டு கலந்துரையாடல்களை முன்னெடுப்பதாக தீர்மானித்தபோதிலும்கூட, இதுவரையில் குறித்த சந்திப்பு இடம்பெறவில்லை. சம்பந்தன் பங்குகொள்ளாத விடயங்களை இராஜதந்திர சமூகம் உற்று நோக்க மறுக்கின்றது என்னும் அரசியல் யதார்த்தமொன்றும் இருப்பது உண்மைதான்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு. “கூழுக்கும் ஆசை - மீசைக்கும் ஆசை“, அதாவது, ஒரே நேரத்தில் ஏதாவது ஒன்றில்தான் கவனம் செலுத்த வேண்டும் - இரண்டிலும் கவனம் செலுத்தக்கூடாது. புதிய அரசியல் யாப்பு வராதென்றால் - நடக்காத ஒன்றுடன் மல்லுக்கட்டக்கூடாது. சம்பந்தனின் கூற்றுப்படி - புதிய அரசியல் யாப்பு வராது - அப்படியே வந்தாலும்கூட, அது கடுப்போக்கு சிங்கள - பௌத்த நிலைப்பாட்டைக் கொண்டதாகவே இருக்கும். அப்படியானால், ஒருவேளை, புதிய அரசியல் யாப்பு வந்தாலும்கூட, அதனால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அவ்வாறாயின் புதிய அரசியல் யாப்பு பற்றி கூட்டமைப்பு எதற்காக மல்லுக்கட்ட வேண்டும்? அதற்கு முன்மொழிவுகளை வழங்கிவிட்டு ஏன் காத்திருக்க வேண்டும்?

நாம், 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தொடர்ந்தும் பேசிவருவதுபோல் தெரியலாம் - ஆனால், கேள்வி, அதனைவிடவும் பேசுவதற்கு வேறு என்ன உண்டு என்பதுதான். புதிய அரசியல் யாப்பு வந்தாலும் - அதனால், தமிழ் மக்களுக்கு நன்மையில்லை என்னும்போது, இருக்கும் ஒன்றை - அது குறைபாடுகளுடையதாக இருந்தாலும்கூட - அதனை பாதுகாப்பது பற்றித்தானே தமிழர் தரப்பு சிந்திக்க முடியும்? ஒருவேளை தமிழர்கள் 13 - விடயத்தை உறுதியாக வலியுறுத்துகின்றபோது, அதனை பலவீனப்படுத்தும் வகையில் அரசாங்கம் ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவருமாயின், அது இலங்கையின் ஆட்சியாளர்களின் மனநிலையை சர்வதேச அரங்குகளில் அம்பலப்படுத்துவதற்கான ஒரு வலுவான ஆதாரமாக இருக்கும். இது தொடர்பில் சம்பந்தன் இனியாவது சிந்திக்க முன்வர வேண்டும். அல்லது தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும். தான் எதனடிப்படையில் செயல்படுகின்றேன் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்திய தூதரகத்தில் ஒன்று- அமெரிக்க தூதரகத்தில் ஒன்று - ஊடகங்களுக்கு ஒன்று - என தடுமாற்றமான வாதங்களை முன்வைக்கக் கூடாது.

# வடக்கு - கிழக்கு அரசியல்வாதிகளின் அலட்சியப்போக்கை வெளிப்படுத்தும் கிண்ணியா படகு பாதை அனர்த்தம்!

**- அலசுவது இராஜதந்திரி -**

*ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியங்களுக்கான உதவி பொதுச் செயலாளர் காலித் கியாரியை சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசியல்வாதிகள் அரசியல் தீர்வும் கிடையாது. புதிய அரசியல் அமைப்பும் உருவாக்கப்பட மாட்டாது என்று தாம் எதிர் நோக்கியுள்ள இக்கட்டான நிலையை தெரிவித்துள்ளனர்.*

*இதேவேளை, வடக்கு-கிழக்கின் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முக்கிய அரசியல் கட்சிகளான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியவை வெறுமனே எட்டப்பட முடியாத அரசியல் தீர்வுகளைப்பேசி தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனவே தவிர, எவ்வகையிலும் மக்களின் அத்தியாவசிய - அடிப்படைத் தேவைகளை புறந்தள்ளியே வருகின்றன. இதற்கு அப்பாவி பள்ளி மாணவர்கள் உட்பட 10 பேரைப் பலி கொண்ட கிண்ணியா படகு பாதை விபத்து ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றது.*

*பாராளுமன்றத்தில் தமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியைக்கூட உரிய வகையில் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கறிந்து அந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய செலவு செய்கின்றனரா என்ற கேள்வியைக்கூட எழுப்புவதாக கிண்ணியா படகு பாதை விபத்து காணப்படுகின்றது.*

*கடந்த நான்கு தசாப்த காலத்துக்கும் மேலாக வடக்கு - கிழக்கின் தமிழ் - முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியலில் நன்கு குளிர் காய்வதற்கு தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ற கோஷம் ஒரு நல்ல கவசமாக இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.*

*யுத்தம் மும்முரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் எந்தவோர் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் கவனத்தை செலுத்த முடியாத நிலையே ஏற்பட்டிருந்தது.*

*இருந்த போதிலும் யுத்த காலத்தில் தமது உயிருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பதவிக்கு வரும் அரசாங்கங்களுடன் இணக்க அரசியலை நடத்தியதன் மூலம் ஓரளவாகினும் மக்களின் நலன்களை பாதுகாத்த வடக்கு - கிழக்கு அரசியல்வாதிகளும் காணப்பட்டிருந்தனர்.*

*இவ்வகையில் மூதூர் கிண்ணியாவின் குறிஞ்சாங்கேணிப் பகுதியில் ஏற்பட்ட படகு பாதை விபத்து பன்னெடுங்காலமாகவே அந்தப் பிரதேச மக்களின் போக்குவரத்து புறக்கணிக்கப்பட்டிருந்ததையே வெளிப்படுத்தியிருந்தது.*

*கிண்ணியா, குறிஞ்சாத்தீவு அனர்த்தத்தையடுத்து நேற்று முதல் அப்பகுதிக்கு ஆறு புதிய பஸ் வண்டிகளுடன் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் படகுப் பாதை மூலமாக குறிஞ்சாக்கேணி நீரேரியைக் கடக்க வேண்டிய தேவையின்றி பாதுகாப்பாக போக்குவரத்தில் ஈடுபட முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.*

*கிண்ணியா-குறிஞ்சாக்கேணிக்கான இப்புதிய பஸ் சேவையை நோக்கும்போது 10 அப்பாவி உயிர்கள் அதுவும் இளம் உயிர்கள் தமது இன்னுயிரை தமது பிரதேச மக்களின் பாதுகாப்பான பயணத்துக்காக தியாகம் செய்துள்ளனரோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.*

*கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகு பாதை அனர்த்தத்தையடுத்து ஆத்திரமுற்ற கிண்ணியா பகுதி மக்கள் அப்பிரதேசத்தின் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரான எம். எஸ். தௌபீக்கின் இல்லத்தினுள் நுழைந்து பலத்த தாக்குதல் நடத்தியுள்ளனர்.*

*பன்னெடுங்காலமாகவே போக்குவரத்துக்கு தகுதியற்ற நிலையில் காணப்பட்ட கிண்ணியா - குறிஞ்சாத்தீவு படகுப்பால சேவை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக்கிடமும் அங்குள்ள அரச அதிகாரிகளிடமும் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது.*

*இருந்தபோதிலும் சீரற்ற படகு பாதை விவகாரம் நெடுங்காலமாகவே புறக்கணிக்கப்பட்டு வந்ததன் விளைவாகவே தற்போது கிண்ணியா - குறிஞ்சாத்தீவு நீரேரியில் படகு பாதை கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.*


*வட பகுதியிலும் யாழ். குடாநாட்டையும் மன்னார் பகுதியையும் இணைக்கும் விதத்தில் படகு பாதை சேவை நீண்ட காலமாகவே சங்குப்பிட்டி நீரேரி ஊடாக இடம்பெற்று வந்திருந்தது.*

*இருந்தபோதிலும் வட மாகாணத்தின் எந்த ஓர் அரசியல்வாதியும் இந்தப் படகு பாதை சேவை குறித்து உரிய கவனம் செலுத்தவில்லை. ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சங்குப்பிட்டி படகு பாதை போக்குவரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்.*

*தற்போது அதிசயிக்கத்தக்க விதத்தில் ஒரு சிவில் பொறியியல் அதிசயமாக மிக அழகான முறையில் சங்குப்பிட்டி பாலம் ஜப்பானிய அரசின் கோடிக்கணக்கான ரூபாய் நிதி உதவியோடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.*

*எனவே, எதற்கெடுத்தாலும் வங்குரோத்துத்தனமான அரசியலையே பேசிவருகின்ற வடக்கு - கிழக்கின் தமிழ் - முஸ்லிம் அரசியல்வாதிகளின் முகத்திரையைக் கிழித்தெறிந்து பகட்டுத்தனமான அரசியல் நடவடிக்கைகளிலிருந்தும் அவர்கள் வெளிவர வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுவதாகவே கிண்ணியா - குறிஞ்சாக்கேணி அனர்த்தம் எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 25 வியாழக்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை - 09**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 1.30 - 3.00**
**திதி : சஷ்டி**



## இன்றைய ராசிபலன்

**25.11.2021**

**மேடம்**
சிரமப்படும் ஒருவருக்கு உதவி செய்து நெகிழ்விப்பீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு நலம் விளைந்து மகிழ்ச்சி ஏற்படுத்தும். உங்களுக்கு விருப்பம் இல்லாத செயல்களில் இன்று ஈடுபட நேரிடும்.

**இடபம்**
அலுவலகத்தில் உங்களுக்கு நல்ல வழிகாட்டி கிடைப்பார். கலை ஆர்வம் வரும். நல்ல விஷயம் ஒன்று நிகழும். எந்தவொரு முடிவையும் நன்கு சிந்தித்த பிறகு எடுப்பது நல்லது.

**மிதுனம்**
சிறு கவலை ஒன்று ஏற்பட்டு உடனேயே விலகும். வாங்கிய கடனை திருப்பி அடைத்து நிம்மதி அடைவீர்கள். பழைய பிரச்னையில் இருந்து மீளுவீர்கள். நண்பர் உதவி செய்வார்.

**கடகம்**
நிதி நிலைமை பற்றிய பழைய பிரச்னை மெல்லத் தீரும். அலுவலகத்தில் பொறுமையைக் கடைப்பிடித்து வெற்றி பெறுவீர்கள். பழைய தவறுகளைத் திருத்திக் கொண்டு நிம்மதி அடைவீர்கள்.

**சிம்மம்**
வாழ்க்கைத்துணையின் சிரமங்களை குறைத்து மகிழ்விப்பீர்கள். பணியாளர்களின் பேச்சினால் அலுவலகத்துக்கு நன்மை விளையும். உங்களுக்கு இருந்த கவலை ஒன்று நீங்கும்.

**கன்னி**
கலகலப்பான நாள். சகபணியாளரிடம் பகை வேண்டாம். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். கவலை ஒன்று தீரும். சுபச்செலவுகள் ஏற்படுவதற்கான அறிகுறி இன்று தெரியும்.

**துலாம்**
சந்தோஷ அனுபவங்களை பெறுவீர்கள். நட்பு வட்டம் விரியும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். பணியிடத்தில் பாராட்டு பெறுவீர்கள். உழைப்பு அதிகம் தேவைப்படும் நாள். மன நிறைவு ஏற்படும்.

**விருட்சிகம்**
பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள். உழைப்பு அதிகரிக்கும். பேச்சிலும், செயலிலும் கவனம் தேவை. மகிழ்ச்சி கூடும். பெருமிதம் கிட்டும். சாதனை ஒன்றை செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு**
பயம் ஏற்பட்டு விலகும். தவறான செயல் செய்யாமல் இருங்கள். மற்றவர் பிரச்னைகளில் தலையிட்டு தொல்லை தர வேண்டாம். உங்களின் தேவை நிறைவேறும். காத்திருந்த செய்தி தாமதமாகக்கூடும்.

**மகரம்**
நிதி விஷயத்தில் இருந்த சிக்கலை ஒழுங்கு செய்வீர்கள். உறவினர் நட்புக்கரம் நீட்டுவார். அதிகம் உழைப்பீர்கள். எதிர்பாலின நட்பால் நன்மை உண்டு. மன அமைதி வரும்.

**கும்பம்**
பணி பற்றிய விஷயம் சற்றுத் தாமதமாகக்கூடும். பலநாட்களாக மனதில் இருந்த குழப்பம் ஒன்று இன்று நீங்கும். குழந்தைகளின் செயல்பாடுகள் மனதிற்கு நிம்மதி அளிக்கும்.

**மீனம்**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். நிம்மதி தரும் செய்தி வரும். கவலையற்ற நாள். புதிய செய்தி ஒன்று வரும். பொறுப்புடன் செயல்படுவீர்கள். பலகாலத் திட்டம் நிறைவேறும்.

# பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரும் விடுதலை ஆகாதவாறு அரசாணையா?

## டி.டி.வி. தினகரன் கண்டனம்



சென்னை, நவ. 25

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இனி விடுதலையாகவே முடியாதவாறு புதிய அரசாணை பிறப்பித்து இருக்கும் தமிழக அரசுக்குக் கண்டனம் தெரிவிப்பதாக அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டி.டி.வி. தினகரன் நேற்று வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

“பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இனி விடுதலையாகவே முடியாதவாறு புதிய அரசாணை பிறப்பித்து இருக்கும் தமிழக அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கிறேன்.

“தமிழக அரசுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 7 தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும்” என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பேசிய ஸ்டாலின், ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகியும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்போது “குதிரை கீழே தள்ளி, குழியும் பறித்த கதையாக“ அவர்கள் இனிமேல் விடுதலையாக முடியாத அளவிற்கு புதிய அரசாணையைப் பிறப்பித்திருக்கிறார். இதேபோல தாங்கள்தான் சிறுபான்மையினரின் காவலன் என்று கூறி, அந்த மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வரும் தி.மு.க., 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களின் விடுதலையையும் இந்த அரசாணையின் மூலம் கேள்விக்குறியாக்கி இருக்கிறது. இதுகுறித்து முதல்வர் உரிய விளக்கம் அளிப்பாரா?”

இவ்வாறு டி.டி.வி. தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஜெயலலிதாவின் வேதா நிலையத்தை அரச உடமையாக்கிய சட்டம் இரத்து!




சென்னை, நவ. 25

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லமான வேதா நிலையத்தை அரசு உடமையாக்கிய சட்டம் இரத்து செய்யப்படுவதாக சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் தோட்ட இல்லமான வேதா நிலையம் நினைவு இல்லமாக மாற்றப்படும் என முந்தைய அ.தி.மு.க. அரசு அறிவித்திருந்தது. அதை செயல்படுத்தும் விதமாக சட்டம் இயற்றப்பட்டு, வேதா நிலையத்தையும் அங்குள்ள அசையும் சொத்துக்களையும் அரசுடமையாக்கியது.

இந்த சட்டத்தை எதிர்த்து ஜெயலலிதாவின் வாரிசுகளான தீபா, தீபக் ஆகிய இருவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

அதேபோல, வேதா நிலையத்துக்கு 67 கோடியே 90 லட்சம் ரூபாயை இழப்பீடாக நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்தும் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

தீபா மற்றும் தீபக் தரப்பில், தனிநபர் சொத்துக்களை கையகப்படுத்துவது தொடர்பாக சட்டம் இயற்ற அரசுக்கு அதிகாரமில்லை எனவும் வேதா நிலையத்தை அரசுடமையாக்கி பிறப்பித்த சட்டத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும் எனவும் நினைவில்லமாக மாற்ற தடை விதிக்க வேண்டும் எனவும் வாதிடப்பட்டது.

மேலும் வாரிசுகளாக அறிவிக்கப்பட்ட தங்களிடம் ஆலோசிக்காமல் நிலம் கையகப்படுத்தப்பட்டதை, வீட்டிற்கு 67 கோடியே 90 லட்ச ரூபாய் அளவிற்கு இழப்பீடு நிர்ணயித்து, அந்த தொகையை சென்னை மாவட்ட நீதிமன்றத்தில் நிலம் கையகப்படுத்துதல் அதிகாரி செலுத்தியது தவறு எனவும் தீபா, தீபக் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்றம், ஜெயலலிதா வாழ்ந்த இல்லத்தை அரசுடை ஆக்கியது செல்லாது என உத்தரவிட்டுள்ளது. வேதா நிலையத்தை 3 வாரங்களில் வாரிசுகளான தீபா, தீபக்கிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் சென்னை உத்தரவிட்டுள்ளது.

# அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்



சென்னை, நவ. 25

அ.தி.மு.கவை வழிகாட்டுதல் குழுதான் நடத்த வேண்டும் என மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் செங்கோட்டையன் வலியுறுத்தியதையடுத்து கடும் வாக்குவாதங்களும், கருத்து மோதல்களும் இடம் பெற்றுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்த நிலையில், 9 மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தலிலும் தி.மு.க. அமோக வெற்றி பெற்றது. இந்த நிலையில், தமிழகம் முழுவதும் விரைவில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருக்கிறது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் இந்த தேர்தல் நடப்பதால், வெற்றியை கோட்டைவிட்டு விடக்கூடாது என அ.தி.மு.க. நினைக்கிறது. வெற்றிக்கான வியூகம் வகுப்பதற்காக அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம் தலைமையில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அ.தி.மு.க வழிகாட்டுதல் குழுவை சீரமைக்க வேண்டும். 11 பேர் எண்ணிக்கை கொண்ட குழுவை 18 ஆக அதிகரிக்க வேண்டும். வழிகாட்டுதல் குழுவுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டும் என ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

அ.தி.மு.கவை வழிகாட்டுதல் குழுதான் நடத்த வேண்டும் என மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் செங்கோட்டையன் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் சிலர் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை குழு தலைவராகவோ, அவைத்தலைவராகவே நியமிக்கலாம் என்று கூறியுள்ளார்கள். இதற்கு எடப்பாடி பழனிசாமி தரப்பு எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் வெளிப்படைத்தன்மை அவசியம்!

## சபையில் எதிரணி வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 25

**"புதிய அரசமைப்பை இயற்றும் விடயத்தில் வெளிப் படைத்தன்மை அவசியம். பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே அதற்கான பணிகள் இடம்பெறவேண்டும். அவ் வாறு இல்லாவிட்டால் புதிய அரசமைப்பையும் மீளப்பெற வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படும்." _ என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரி வித்தார்.**



பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் அமைச் சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

புதிய அரசியலமைப் பொன்று உருவாக்கப்படும் பட்சத்தின் அதன் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனம் முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பு பற்றி கருத்துகள் வெளிவந்தாலும் அதனை நாம் கண்டதில்லை.

புதிய அரசமைப்பை இயற்றும் பணியானது பாராளுமன்றத் தெரிவுக்குழு வின் ஊடாகவே முன்னெடுக் கப்பட வேண்டும். சோல்பரி யாப்பு, ஸ்ரீமா அம்மையாரால் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்பு, ஜே.ஆரால் முன்வைக்கப்பட்ட புதிய அரசமைப்பு ஆகியவற்றுக்கான பணிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது என்ன நடக்கின்றது, ஜனாதிபதிக்காக வழக்குகளை வாதாடியவர் களை நியமித்து அரசமைப்பை தயாரிப்பது சரியா, இந்த வழி முறையில் புதிய அரசியல மைப்பை உருவாக்கினால் அதையும் மீளப்பெற வேண்டிய நிலையே அரசுக்கு ஏற்படும்.

புதிய அரசமைப்பு தொடர் பில் நிபுணர் குழுவானது எமது கருத்துகளை கோரி கடிதம் அனுப்பியிருந்தது. 13 ஆவது திருத்தச்சட்டத்தைதவிர ஏனைய விடயங்கள் பற்றி கதைக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படியான குழு எப்படி அரச மைப்பை தயாரிக்கும்-என்றார். (அ)

## என் மீதே இப்போது கடும் தாக்குதல்கள்

### மஹிந்தானந்த கூறுகிறார்

கொழும்பு, நவ. 25

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை விடவும், என் மீதே தற்போது கடும் தாக்குதல்கள் தொடுக் கப்பட்டு வருகின்றன - என்று விவசாய அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகே தெரிவித் துள்ளார். அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

செயற்கை உரம் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப் பட்ட நிலையில், விவசாயிகள் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தினர். என்மீது கடும் விமர் சனங்களை முன்வைத்தனர். போராட்டங்களில் எனது உருவ பொம்மைகளை எரித்தனர்.

பிரபாகரன் மற்றும் ரணில் விக்ரமசிங்கவின் உருவ பொம் மைகள் கூட, மக்கள் இந்தளவு எரித்திருக்கமாட்டார்கள். அப் படி இருந்தும் பசுமை விவசா யம் தொடர்பான கொள்கை சிறப்பு என்பதால்தான் அந்த கொள்கையில் உறுதியாக இருந்தேன்-என்றார்.

## பாவற்குளத்தில் தாயுடன் நீராட சென்ற 4 வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி மரணம்!

வவுனியா, நவ. 25

வவுனியா, பாவற்குளத் துக்கு தாயுடன் நீராடச் சென்ற 4 வயது சிறுவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளான் என உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் வசித்து வரும் தாய் ஒருவர் தனது பிள்ளைகளு டன் பாவற்குளம் குளத்துக்கு நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது 4 வயதுச் சிறுவனைக் குளத்தில் நீராட விட்டு விட்டு தாய் கரைக்கு வந்து மீண்டும் திரும்பிக் குளத்துக்குள் சென்றபோது நீராடிக்கொண்டிருந்த சிறுவனை காணவில்லை. இதனையடுத்து தாயார் அங்கு நின்றவர்கள் மற்றும் ஊரவரை அழைத்துச் சிறுவனை தேடிய போது அவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டார்.

உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் சிறு வன் மரணமடைந்துள்ளார்.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியைச் சேர்ந்த அப்ஜத் என்ற 4 வயது சிறுவனே மரண மடைந்தவராவார். இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## மன்னாரில் 23 நாட்களில் 470 பேருக்கு கொரோனா

மன்னார், நவ. 25

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதி கரித்துச் செல்லும் நிலையில் கடந்த 23 நாட்களில் 470 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலவரம் தொடர் பாக மாவட்ட பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று புதன்கிழமை விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-மன்னார் மாவட்டத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை மேலும் புதிதாக 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை 470 கொரோனா தொற் றாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இந்த வருடம் 2846 தொற் றாளர்களும்,மன்னார் மாவட் டத்தில் தற்போது வரை 2863 தொற்றாளர்களும் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங் கள் நிகழ்ந்துள்ளது-என குறிப் பிடப்பட்டுள்ளது.

## இரசாயன உரம் இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு அனுமதி!

கொழும்பு, நவ. 25

இரசாயன உரம், பீடைக் கொல்லிகள் மற்றும் திரவ உரங்களை இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள தாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் இதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பான அதி விசேட வர்த்தமானி அறிவித் தல் வெளியாகும் என அமைச் சர் தெரிவித்தார்.

அத்துடன் இரசாயன உரம், பீடைகொல்லி மற்றும் திரவ உரம் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி இரத்து செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே மேலும் கூறினார். (அ)

## கிண்ணியா படகு பாதை விபத்து குறித்து பக்கசார்பற்ற விசாரணை அவசியமாகும்

### இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

திருமலை, நவ. 25

கிண்ணியா,குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் உயி ரிழந்த நான்கு மாணவர்கள் மற் றும் ஒரு ஆசிரியரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், குறித்த படகு விபத்து தொடர் பில் கிழக்கு மாகாண ஆளுனர் பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் அந்தச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பொதுச்செயலாள ருமான பொன்னுத்துரை உதய ரூபன் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் நீதியான விசாரணையை நடத்தி இந்த மாணவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்க முன்வரவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத் திலும் இவ்வாறான பயணங் களை மேற்கொண்டு பாடசாலை களுக்கு செல்லும் சூழ்நிலை மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் இருக்கும் காரணத் தால் அவர்களுக்கான பாது காப்பை உறுதிப்படுத்த கிழக்கு மாகாணசபை நடவடிக்கை யெடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ)

## கிண்ணியா படகுப் பாதையை இயக்கியவர்கள் தப்பியோட்டம்

### தேடுதல் வேட்டை ஆரம்பம்

திருமலை, நவ. 25

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி யில் விபத்துக்குள்ளான மோட் டார் பொருத்தப்பட்ட மிதப்பு பாலத்தை இயக்கியவர்கள், அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற் கான தேடுதல் வேட்டை ஆரம்பமாகியுள்ளது.

மிதப்பு பாலத்தை பயன் படுத்துவதற்கான அனுமதியை கிண்ணியா உள்ளாட்சி சபையே வழங்கியுள்ளதாகவும், பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தும் அளவுக்கு அது தரமானதாக இருக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இதற்கிடையில் மேற்படி சம்பவம் தொடர்பில் விசா ரணை நடத்துவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் குழு வொன்றை அமைத்துள்ளார்.

உரத்தடை வர்த்தமானி வாபஸ்

# விவசாயிகள் போராட்டத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றியே!

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

**இரசாயன உரம், கிருமிநாசினி மற்றும் களைநாசினிகளை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு நீக்கியமையானது விவசாயிகளின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரசாயன உரம், கிருமிநாசினி மற்றும் களை நாசினிகளை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து நாட்டு மக்களை இந்த அரசு வதைப்படுத்தியது. இதற்கு எதிராக விவசாயிகள் வீதிக்கு இறங்கினர். இதனால் விவசாயமும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசு மீளப்பெற்றுள்ளது. இது அரசின் இயலாமையை வெளிப்படுத்துகின்றது.

எந்தவொரு திட்டமும் முறையாக வகுக்கப்படவேண்டும். இது தொடர்பான அரசின் அணுகுமுறை தவறு என்பதை நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். விவசாயிகளின் போராட்டத்துக்கு நாமும் ஆதரவு வழங்கினோம் - என்றார். (அ)

# அதிவேக நெடுஞ்சாலைகளில் கட்டணம் அறவிட புதிய முறை

கொழும்பு, நவ. 25

LANKA QR கட்டண முறையினூடாக அதிவேக நெடுஞ்சாலைகளில் கட்டணங்களை அறவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திரவப்பணப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி, இந்தக் கட்டண முறை எதிர்காலத்தில் அதிவேக நெடுஞ்சாலைகளில் உள்ள கட்டண அறவீட்டு நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கைப்பேசிகளில் குறித்த தொகையை உள்ளிட்டு எந்தவொரு வங்கியினதும் LANKA QR செயலியின் ஊடாக, நுழைவாயிலில் காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்து கட்டணத்தை செலுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண முறைமையை அமுலாக்குவதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# டிசெம்பரிலிருந்து புதிதாக 4 விமான சேவை ஆரம்பம்

கொழும்பு, நவ. 25

இலங்கைக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் மேலும் புதிதாக 04 நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ரஷ்யாவின் அஷூர் விமான சேவைகள் நிறுவனம், கசகஸ்தானின் எவர் அஸ்தானா நிறுவனம், போலந்தின் லொட் விமான நிறுவனம் மற்றும் இத்தாலியின் நியோஸ் விமான நிறுவனம் ஆகியவையே தமது சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன.

ரஷ்யாவின் அஷூர் விமான சேவைகள் டிசெம்பர் 3 முதல் வாரத்துக்கு இரண்டு முறையும், கசகஸ்தானின் எவர் அஸ்தானா நிறுவனம் டிசெம்பர் 3 முதல் வாரத்துக்கு இரண்டு முறையும், போலந்தின் லொட் விமான நிறுவனம் டிசெம்பர் 8 ஆம் திகதியும், இத்தாலியின் லொட் விமான நிறுவனம் டிசெம்பர் 15 ஆம் திகதியும் இலங்கைக்கு நேரடி விமானங்களை சேவையில் ஈடுபடுத்துமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறினார். (அ)

# திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி. மனநலம் பாதிக்கப்பட்டவரா?

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, நவ. 25

பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சியின் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பது தொடர்பில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள நேற்று கோரிக்கை விடுத்தார்.

திஸ்ஸ குட்டியாராச்சியின் நடத்தையை பார்க்கும்போது அவர் மன நலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரிகின்றது என சுட்டிக்காட்டியே சபாநாயகரிடம் இந்த கோரிக்கையை அவர் விடுத்தார்.

உங்களின் இந்தக் கோரிக்கை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டுவரப்படும் என சபைக்கு அப்போது தலைமை தாங்கிய பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். (அ)

# படகு கவிழ்ந்து மீனவர் ஒருவர் மாயம்

மட்டக்களப்பு, நவ. 25

மட்டக்களப்பு முகத்துவாரம் கடல் பகுதியில் படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் படகு கவிழ்ந்ததில் கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ள சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

படகு செட்டிபாளையம் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு திரைமடு சுவீஸ் கிராமத்தைச் சேர்ந்த 50 வயதுடைய சுந்தரராஜா சுரேஸ் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த மீனவர் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இயந்திரப் படகில் தனியாக முகத்துவாரம் கடலில் மீன் பிடிப்பதற்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடலில் இருந்து வலையை இழுக்கும்போது படகு கவிழ்ந்ததை அடுத்து அவர் கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளார்.

கவிந்த படகு செட்டிப்பாளையம் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளதாகவும் காணாமல்போனவரை கடற்படையினர் தேடிவருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு யாழில் பயறு, உழுந்து விதை பொதிகள்

யாழ்ப்பாணம், நவ. 25

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயறு மற்றும் உழுந்து விதைப் பொதிகள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை திட்டத்திற்கமைய, பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வழிகாட்டலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உழுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கைத் திட்டத்தின் ஒரு கட்டமாக நேற்று காலை 9.30 மணியளவில் விதைப் பொதிகள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டம் முழுவதும் 8 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 469 கிலோ பயறு 546 பயனாளிகளுக்கும் 3263 கிலோ உழுந்து 903 பயனாளிகளுக்கும் 1632 கிலோ இஞ்சி 64 பயனாளிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன், இராஜாங்க அமைச்சின் செயலாளர் அமல் ஹர்ஷ டி சில்வா, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை உத்தியோகத்தர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-03)

# பருத்தித்துறை நகர சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேறியது

வடமராட்சி, நவ. 25

பருத்தித்துறை நகரசபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சபைத் தலைவரின் மேலதிக ஒரு வாக்கினால் நிறைவேறியது

சபையின் விசேட கூட்டம் நேற்று புதன்கிழமை காலை9 மணிக்கு ஆரம்பமானபோது சபைத் தலைவர் யோசப் இருதயராஜ் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்

வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியதை அடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஆளும்கட்சியான தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் 5 பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஆகியவற்றின் தலா ஒரு உறுப்பினருமான 7பேரும் ஆதரவாகவும் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக 7 பேர் எதிராக வாக்களித்தனர்.

மொத்தமாகவுள்ள 15 உறுப்பினர்களில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சமூகமளிக்காததால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டது.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க இச்சூழ்நிலையில் சபைத்தலைவருக்கு உள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய அவர் மேலதிக ஒரு வாக்கு அளித்தமையால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது. (அ-02)

ஈஸ்டர் தின தாக்குதல்

# அரச புலனாய்வு சேவையின் அறிக்கை வெளியாகியதா?

கொழும்பு, நவ. 25

ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹசிம் குறித்து தொடர்பில், தாக்குதல்களுக்கு முன்னதாகவே முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் நிலந்த ஜயவர்தனவினால் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையின் சில பகுதிகளை இராஜாங்க அமைச்சர் தனது ருவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

சமூக ஊடகங்களில் ஆவணம் ஒன்றை வெளியிட்ட இராஜாங்க அமைச்சர், முன்னாள் அரச புலனாய்வுச் சேவையின் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய பொதுச் செயலாளரான அப்போதைய சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தாக்குதல்களுக்கு 11 மாதங்களுக்கு முன்னர் சஹ்ரானை கைதுசெய்யுமாறு நிலந்த ஜயவர்தனவினால் பாராளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டாரவுக்கு அறிவிக் கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் விஜேசேகர கூறியுள்ளார். (அ)

# நினைவேந்தல்களை மக்கள் வீடுகளில் அனுஷ்டிக்கமுடியும்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

யாழ்ப்பாணம், நவ. 24

**யுத்தத்தில் இழப்புகளைச் சந்தித்தவர்கள் சட்டத்துக்கு உட்பட்டு நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்க முடியுமென, பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.**



தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதை பொதிகள் வழங்கும் நிகழ்வின்போது உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை வரலாற்றிலே முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் என்றவகையிலே இம்முறையே விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 25 மாவட்டங்களில் உள்ள அத்தனை பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் பிரிவுக்கும் இந்த நிதி சமமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியை கொண்டு சேர்க்கவேண்டிய பொறுப்பு வடக்கு- கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கின்றது.

எங்களுக்கு உரிமை கிடைத்தால் போதும் அதன் பின்னர் எல்லாம் கிடைக்கும் என சிலர் கூறுகின்றனர். ஆனால், வளர்ச்சி என்பது எல்லா வகையிலும் நமக்கு கிடைக்கவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழரின் இருப்பு என்பது கேள்விக்குறியாகி இருக்கின்றது. திருகோணமலையில் ஓர் ஆசனம் தான் கிடைக்கின்றது. இன்னும் சில வருடங்களில் அதுவும் கிடைக்குமா என்பது கேள்விக்குறி.

பேசிக்கொண்டும் வெற்றுடும் அரசியல் அல்ல. ஒரு சமூகத்துக்கு தேவையான அத்தனை துறையிலும் வளர்ச்சிகளை ஏற்படுத்த வேண்டும். தூரநோக்குடன் திட்டங்களை வகுக்கவேண்டும். அடுத்த தலைமுறையாவது நல்ல நிலைமையில் இருக்கவேண்டும்.

போராட்ட அரசியலை நாம் கொச்சைப்படுத்தமாட்டோம். அது உயர்ந்த நோக்கில் இடம்பெற்றது. அடுத்ததாக எதிர்ப்பு அரசியல்,நாங்கள் எதை செய்தாலும் எதிர்ப்போம் என்ற அரசியல் காணப்படுகிறது. அதனால் எதையும் சாதிக்க முடியாது. முள்ளிவாய்க்கால் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சரியான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. நான் உட்பட 16 பேர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தோம். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. நீண்டகாலத் தீர்வு விடயங்களிலும் நாம் சாதிக்கவில்லை. அபிவிருத்தி விடயங்களையும் நாம் பெற்றுக் கொடுக்கவில்லை. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்று சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் -என்றார்.

இந்நிகழ்வுக்குப் பின்னர் நினைவேந்தல் தொடர்பாக நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்படுகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் இராஜாங்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய போது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், இழப்புகளை சந்தித்தவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு வீடுகளில் நினைவேந்தல்களை அனுஷ்டிக்க முடியும். அவர்களுக்கு நாங்கள் இந்த இடத்திலே ஆறுதலை சொல்ல விரும்புகிறேன் - என்றார். (அ-03)

# ஊடகச் சட்டங்களில் விரைவில் திருத்தம்

கொழும்பு, நவ. 25

இலங்கையில், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில், ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்நாட்டுச் சட்டங்கள், சர்வதேச சட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இலங்கையில் ஊடகக் கொள்கையொன்றை தயாரிப்பது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் தெரிவித்தார்.

சமூக ஊடகங்கள் உட்பட்ட ஊடகங்களின் பயன்பாடு மற்றும் நடத்தை பற்றிய தொழில்சார் திறன்கள் மற்றும் கல்வியுடன் கூடிய ஊடகவியலாளர்களுக்கான பின்னணியை உருவாக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, ஊடகம், சந்தைப்படுத்தல், கல்வி, சட்டம், நிர்வாகம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் அனுபவமுள்ளவர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்காக ஊடகத்துறை அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(அ)

# முகக்கவசம் அணியாத 10,000 பேருக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 25

மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையின்போது, முகக்கவசங்களை சரியாக அணியாத சுமார் 10,000 பேருக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மேல் மாகாணத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சரியாக முகமூடி அணியாத 9,658 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், முகக்கவசம் அணியாத 4,351 பேருக்கு முகக்கவசம் வழங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் தினமும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய பெற்றோலிய, வாயு நிறுவனத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, நவ. 25

தேசிய பெற்றோலிய மற்றும் வாயுக்கள் நிறுவனத்தை நிறுவுவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த நிறுவனத்தின் நிர்வாக நிறுவனமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நிறுவனத்துக்கு 2021 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5 ஆம் பகுதியின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும்.

அதற்கமைய, 2007 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தேசிய பெற்றோலிய மற்றும் வாயுக்கள் நிறுவனத்தை நிறுவுவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கிண்ணியா மிதப்புப் பால விபத்து; மூன்று பேர் பொலிஸாரால் கைது!

திருமலை, நவ. 25

கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் மிதப்புப் பாலம் விபத்துக்குள்ளானது தொடர்பில் 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி, மோட்டார் பொருத்தப்பட்ட மிதப்புப் பாலத்தை இயக்கிய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணியில் நேற்று முன்தினம் குறித்த மிதப்புப் பாலம் நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 4 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்ததுடன், 20க்கும் மேற்பட் டோர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், சம்பவம் குறித்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து, கிண்ணியா பொலிஸாரால் ஒருவரும், திருகோணமலை பொலிஸாரால் இரண்டு பேரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ)

# மாகாண தேர்தலுக்கு அஞ்சுகின்றது அரசு!

## உடன் நடத்துமாறு எதிரணி வலியுறுத்து

கொழும்பு, நவ. 25

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஏன் அஞ்சுகின்றது, தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். தோல்வி பயத்தால்தான் தேர்தலை அரசு இழுத்தடிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம். எமது பக்கத்தில் தவறு இடம்பெற்றதுதான். அது சரி செய்யப்பட வேண்டும். அதற்கான ஆதரவை நாம் வழங்குவோம். எனவே, எமது தவறை மட்டுமே சுட்டிக்காட்டிக் கொண்டு தேர்தலை இழுத்தடிக்க வேண்டாம். இரு வருடங்கள் தவறை மட்டும்தான் கூறிக்கொண்டிருக்கின்றீர்கள்.

அதேபோல உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் இரு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது - என்றார். (அ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி வழங்குவதில் தொடர் தாமதம்

கொழும்பு, நவ. 25

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக நீதி வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மீண்டும் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வாதுவையில் புனரமைக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு பல தடவைகள் கூறினாலும் அதிகாரிகள் அதனை நடைமுறைப்படுத்த முற்படுவதில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்

**கொழும்பு பேராயர் மீண்டும் கவலை**


அமுல்படுத்தப்படவேண்டும். அவர்களால் அதனைச் செய்ய முடியாவிட்டால் அதனைச் செய்யக்கூடிய ஒருவரிடம் இந்தப் பணியை ஒப்படைக்கவேண்டும்.

தங்களுக்கு அரசியல் இல்லை, இந்த வழக்கில் நீதி வழங்கப்பட வேண்டும். தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மையை மட்டுமே நாங்கள் விரும்புகிறோம். தயவு செய்து இந்த உண்மையை மறைக்க முயற்சிக்காதீர்கள்.

உயர் பதவியில் இருப்பவர்கள் இந்த தாக்குதல்களுக்கு நீதி வழங்குவதாக உறுதியளித்தவர்கள். தற்போது, எதுவுமே நடக்காதது போல் வாழ்கிறார்கள். அப்படியான நடத்தையை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (அ)

# இந்தியாவை விட்டு கைநழுவும் இலங்கையின் இனப்பிரச்னை?





**நா.யோகேந்திரநாதன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்காவின் அழைப்பை ஏற்று இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுகளை நடத்த அமெரிக்கா சென்றுள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுகள் நடத்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேரடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தமை பலருக்கு ஆச்சரியத்தை மூட்டியிருக்கலாம். ஆனால் அண்மைக் காலங்களில் அமெரிக்கா உட்பட மேற்குலகின் இனப் பிரச்னை தொடர்பான நகர்வுகள் இந்தியாவைத் தவிர்த்தே இடம்பெற்று வந்ததை அவதானிக்க முடியும். கடந்த இரு மாதங்களில் அரசாங்கத்துடன் பேச்சுகளை நடத்த வந்த அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்து உரையாடியிருந்தனர்.

இலங்கையில் அமெரிக்கா வலுவூன்றுவதற்கான தயாரிப்புகள் இடம் பெற்றுவரும் நிலையில் அமெரிக்கா தமிழர் தரப்புடன் தொடர்புகளைப் பேணுவது அந்தத் தயாரிப்புகளில் ஒரு பகுதியா எனவும் சில தரப்பினர் கருதக்கூடும்.

அதேவேளையில் இலங்கைக்கான சீனத் தூதுவர் வெகு விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேச்சுகளை நடத்தவுள்ளதாகத் தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் சிங்கள ஊடகங்கள் தலைப்புச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இச்செய்திகளைப் பார்க்கும்போது பூகோள, பிராந்திய வல்லாதிக்கப் போட்டிகளில் மீண்டும் இலங்கையின் இனப்பிரச்சினை பகடைக்காயாக உருட்டப்படப் போகிறதா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

அண்மையில் சீனாவிலிருந்து இலங்கைக்கெனக் கொண்டு வரப்பட்ட சேதனப் பசளையில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் இருப்பதாகக் கூறப்பட்டு அது நிராகரிக்கப்பட்டது. ஏற்கனவே இலங்கை மக்கள் வங்கியுடன் கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலேயே சீனப் பசளை கொண்டு வரப்பட்டது. இந்த நிலையில் திறைசேரி மக்கள் வங்கியின் கொடுப்பனவை நிறுத்தியிருந்தது. எனவே சீனா உடனடியாக மக்கள் வங்கியை சீனாவின் வர்த்தகக் கறுப்புப் பட்டியலில் இணைத்துவிட்டது. மேலும் பசளைக்கு இறக்குமதி தடை அறிவிக்கப்பட்டதையடுத்து மேற்படி சீனக் கப்பல் திரும்பிச் சென்று பெயர் மாற்றி மீண்டும் வந்து இலங்கைக் கடற்பரப்பிலேயே தரித்து நிற்கிறது.

அதேவேளையில் இங்கு பசளையை அனுப்பிய சீன வர்த்தக நிறுவனம் பசளை திருப்பி அனுப்பப்படுமானால் போக்குவரத்துக் கட்டணமாகவும் தாமதக் கட்டணமாகவும் 8 பில்லியன் டொலர் செலுத்தவேண்டுமெனத் தெரிவித்துள்ளது. இலங்கை எரிபொருள், சமையல் எரிவாயு, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யவே அந்நியச் செலாவணி தட்டுப்பாட்டில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் 8 பில்லியன் டொலர் என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் சுலபமாகச் செலுத்தக் கூடிய தொகையல்ல.

எனினும் சீனத் தூதுவர் பசளையின் தரம் பற்றி மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு செய்ய சம்மதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் சீனப் பசளையை மூன்றாம் தரப்பால் ஆய்வு செய்யப்படுவதை தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையெனத் தெரிவித்துள்ளார்.

சீனத் தூதுவர் இதைச் சிலர் அரசியல் பிரச்சினையாக்குகிறார்களெனவும் இது வர்த்தகம் தொடர்பான பிரச்னை மட்டுமே எனத் தெரிவித்துள்ளார். ஆனால் சீனப் பசளை நிறுத்தப்பட்டதும், உடனடியாக இந்தியாவிலிருந்து மொனோ நைட்றஜன் உரம் இறக்குமதி செய்யப்பட்டதும் அரசியல் உள்நோக்கம் இல்லாதவை என்று சொல்லி விட முடியுமா?

எது எப்படியிருந்த போதிலும் நீண்டகாலமாக நெருக்கமான உறவைப் பேணி வந்த சீனாவுக்கும், இலங்கைக்குமிடையே ஒரு கோடு விழுந்து விட்டது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

முன்னாள் அமெரிக்கப் பிரஜையான கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகவும் அமெரிக்கப் பிரஜையான பஸில் ராஜபக்ஷவை நிதியமைச்சராகவும் கொண்ட இலங்கை அரசு மெல்ல மெல்ல அமெரிக்கா பக்கம் சாயும் போக்கை அவதானிக்க முடியும். இந்த இருவரினதும் குடும்பங்கள் அமெரிக்கப் பிரஜைகள் என்பதும் அவர்கள் அமெரிக்காவிலேயே நிரந்தரமாகக் குடியிருந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"யுகனெவிய" திட்டம் மூலம் கெரவலப்பிட்டிய மின் நிலையத்தின் 40 வீதப் பங்குகளை வழங்குவது, இலங்கையின் எரிபொருள் விநியோக உரிமையை வழங்குவது, திருகோணமலை எண்ணெய் குதங்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகளால் அமெரிக்கா இலங்கையில் வலுவாகக் காலூன்றுவதற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டு விட்டது. அது மட்டுமின்றி 2022 வரவு - செலவுத் திட்டம் மேற்கு நாடுகளையும் சர்வதேசக் கடன் வழங்கும் நிறுவனங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல், அரச செலவினங்களைக் குறைத்தல் என்ற பேரில் மக்கள் விரோத நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்படவுள்ளன. கொழும்பின் பல முக்கிய பகுதிகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 1220 கோடி ரூபாவுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. அரச செலவினங்களைப் குறைப்பது என்ற பேரில் அரச ஊழியர்களின் வேதனம் உயர்த்தப்படவில்லை என்பதுடன் ஓய்வூதிய வயதெல்லையும் 10 வருடங்களால் அதிகரிக்கப்படவுள்ளது. அதனால் ஓய்வூதியர்கள் பெறும் சலுகைகள் 10 வருடங்கள் பின்தள்ளப்படுவதுடன் 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகின்றன. பாவனைப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டதால் இறக்குதியாளர்களும் பெரும் வர்த்தக முதலைகளும் கொள்ளை இலாபம் ஈட்டும் நிலையில் சகல சுமைகளும் பொதுமக்கள் தலையிலேயே சுமத்தப்படுகின்றன.

இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே. ஆனால் ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் பொருளாதார வழிமுறை மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையிலே அமைந்துள்ளது.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தில் ஒரு முக்கியமான இலங்கையின் இந்தப் போக்கை சீனா விரும்பப்போவதில்லை. இதைக் கட்டுப்படுத்த சீனா பல்வேறு பொருளாதார, ராஜதந்திர வழிமுறைளை மேற்கொள்ளத் தவறப் போவதில்லை.

அவ்வகையில் சீனா இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக பார்வையைத் திருப்பியிருப்பது ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல.

ஏனெனில் கடந்த காலங்களில் இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என்பன இலங்கையைக் கையாள்வதில் இனப்பிரச்னையை ஒரு ஆயுதமாகப் பாவித்தன என்பதை மறுக்கமுடியாது.

தற்சமயம் இந்த நிலை கடந்து விட்டது போலவே தென்படுகிறது. இதுவரை மேற்குலகம் இந்தியாவை அனுசரித்தே இலங்கை இனப்பிரச்னையைக் கையாண்டு வந்தது. இப்போது நேரடியாகவே அமெரிக்கா களமிறங்கிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்கா சென்றுள்ள நிலையில் சீனாவின் அழைப்பு பற்றிய செய்திகள் வெளி வந்துள்ளன. எனவே இப்போது இலங்கை இனப் பிரச்னையில் அமெரிக்கா, சீனா என எதிரெதிரான தரப்புகள் தலையிடும் சாத்தியம் தோன்றியுள்ளது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியத் தரப்பினர் இனியும் பழைய பாதையில் மற்றவர்களுக்குப் பயன்படுபவர்களாகச் செயற்படப் போகிறார்களா? ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளிடமுள்ள பாரம்பரிய சீன எதிர்ப்புணர்வு, மேற்குலக பக்தி என்பவற்றைக் களைந்து ஒரு ஒடுக்கப்பட்ட இனமென்ற அடிப்படையில் அரசியல் ரீதியாகவும் தந்திரோபாய வழிமுறைகளூடாகவும் செயற்படுவது ஒன்றே எம் முன்னால் உள்ள விமோசனத்திற்கான ஒரே பாதையாகும்.

- அருவி

**"இலங்கைக்கான சீனத் தூதுவர் வெகு விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேச்சுகளை நடத்தவுள்ளதாகத் தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் சிங்கள ஊடகங்கள் தலைப்புச் செய்திகளை வெளியிட்டுள்ளன. இச்செய்திகளைப் பார்க்கும்போது பூகோள, பிராந்திய வல்லாதிக்கப் போட்டிகளில் மீண்டும் இலங்கையின் இனப்பிரச்னை பகடைக்காயாக உருட்டப்படப் போகிறதா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.**



# யாழ் பிரஜைகள் ஒன்றியம் ஏன் எப்படி உதித்தது?

**பொறியியலாளர் சூரியசேகரம்**

**யாழ்** மாவட்டத்திலுள்ள பால் பண்ணைகளில் உற்பத்தியாகும் பெரும்பாலான உடன் பசுப் பால் யாழ்க்கோ கூட்டுறவு சங்கத்தினூடாகவே சந்தைப் படுத்தப்படுகிறது. வாங்கிய பாலை மக்கள் அதே நாளிலேயே கொதிக்கவைத்து நுகரவேண்டியுள்ளது. அல்லது அது பழுதடைந்துவிடும். அது மட்டுமல்ல கொதிக்க வைக்கும்போது அதன் வெப்பநிலை 1000 C க்கும் மேலாகவிருப்பதால் பாலிலுள்ள சத்துக்கள் அதிகளவு வெளியேறிவிடுகிறது.

இந்தக்காரணங்களுக்காகவே உலகம் பூராகவும், 1864 இல் பிரஞ்சு தேசத்து விஞ்ஞானி 'லூயி பாஸ்ரர்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பாலைப் பதப்படுத்தும் முறையே இன்றும் பாவனையில் உள்ளது. யாழ் மக்களுக்கு மட்டும் 157 வருடங்களுக்குப் பின்னும் இது வந்து சேரவில்லை! எல்லோரும் விளங்கிக் கொள்ள வேண்டிய இந்த பாலைப் பதப்படுத்தும் முறையின் விளக்கம் பின்வருமாறு:

உடன் பாலை சூடாக்கி 1610 F (720C) இல் 15 செக்கன்களுக்கு மட்டுமே வைத்திருந்த பின் திடீரென அதை 390 F (40C) இற்கு குளிராக்கி பின் போத்தலில் அல்லது பைக்கற்றில் அடைப்பதே "லூயி பாஸ்ரர்" முறையாகும். இதில் ஒரு மருந்தும் கலக்கப்படுவதில்லை.

இதன் முக்கியமான நன்மைகள் பின்வருமாறு:

1. உடன் பாலிலுள்ள சுகாதாரத்துக்குப் பாதகமான எல்லா நோய்க் கிருமிகளும் அகற்றப்பட்டு விடும்.
2. அதேவேளை பாலிலுள்ள சத்துக்கள் ஒன்றுமே அகற்றப்படாது.
3. அடைக்கப்பட்ட இந்தப்பால் குளிர்சாதனப் பெட்டியில் 6 நாட்களுக்கு பழுதடையாமல் இருக்கும். அல்லது பாவிக்க முடியும்.
4. இந்தப்பாலில் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தேவையான போசாக்கு அதிகளவு கிடைக்கும்.

மேற் கூறியவற்றிலிருந்து பைக்கற் அல்லது போத்தலில் அடைத்த - "லூயி பாஸ்ரர்" முறையில் பதப்படுத்தப்பட்ட பாலின் முக்கியத்துவத்தை எல்லோரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இதன் அடிப்படையில்தான் யாழ் மாவட்ட செயலகத்தில் நடந்த தவறு களால் 2016 தொடக்கம் இன்று வரையும் மக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ஏன்பதை அளவிடலாம். உண்மையில் கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

"லூயிபாஸ்ரர்" முறைப்படி உடன் பாலை பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்குவதற்காக, பெருமளவு நிதி அரசால் யாழ் மாவட்ட செயலகத் திற்கு 2016 இல் வழங்கப்பட்டும் இதுவரை அத்திட்டம் அவர்களால் பூர்த்தியாக்கப்பட்டு யாழ்கோவிற்கு கையளிக் கப்படவில்லை.

இத்திட்டத்தை சரியான முறையில் கையாளாததால், நிதியில் ஒரு பகுதியை வீணாக்கியும் மிகுதியை திறைசேரிக்கு திருப்பியனுப்பியதையும் அறிந்த புத்திஜீவிகள் ஒரு சிலர், மக்களின் நலன் கருதி, தகவல் அறியும் சட்டம் இல.12 இன் அடிப்படையில், முழு விபரங்களையும் கோரியதன் விளைவாக, எழுத்து மூலம் அரசாங்க அதிபரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் சாராம்சம் பின்வருமாறு:

1. இத்திட்டம் நிவர்த்தி செய்ய முடியாத அளவுக்கு தோல்வியடைந் துள்ளது.
2. இஸ்ரேலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரைவாசி இயந்திரங்கள் விபரக்குறிப்புக்கு மாறானதும் பொருத்த மற்றவையானதுமாகக் காணப்பட்டது.
3. மிக முக்கியமான மிகுதி இயந்திரங்கள் வந்து சேரவேயில்லை.
4. ஆகவே தொழிற்சாலை இயங்கவே முடியாத நிலை.
5. தொழிற்சாலைக்கான கட்டட வேலைக்கும் அதேகதிதான்.

சமீபத்தில் நான் பார்வையிட்ட போது கண்டறிந்தவை பின்வருமாறு:

அத்திவாரமும் சுவர்களும் மட்டுமே கட்டப்பட்டு கூரையில் ஒரு சில திறஸ் (Trusses) மட்டுமே ஏற்றப்பட்டுள்ளது. கூரையில்லாத கட்டடம். நிலம் இழுக்க வில்லை. சுவர்கள் பிளாஸ்ரர் பண்ண வில்லை. கதவுகள், ஜன்னல்கள், மின்சார வேலைகள், பிளம்பிங் வேலைகள் ஒன்றுமே செய்யவில்லை.

கட்டடத்திற்குள் மண் நிலமும் மழையால் நீர்ப்பாசனமும் இருப்பதால் உட்கட்டடம் காடாக மாறியுள்ளது.

இத்திட்டத்திற்கு அரசால் ஒதுக்கப் பட்ட நிதியை கச்சேரி கையாண்ட முறையினால் ஏற்பட்ட விளைவின் சுருக்கம் பின்வருமாறு:

**அரசால் ஒதுக்கப்பட்ட மொத்த பணம்**
**ரூபா 85.38 மில்லியன்**
**வீணாக்கப்பட்ட தொகை**
**ரூபா 28.94 மில்லியன்**
**திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்ட தொகை**
**ரூபா 56.44 மில்லியன்**

இதனால் யாழ் மாவட்டத்தில் வசிக்கும் 6 இலட்சம் மக்களுக்கு, முக்கியமாக குழந்தைகளுக்கு, தேவையான போசாக்கு பற்றாக்குறையை பதப்படுத்தப்பட்ட பால் மூலம் தீர்க்கமுடியவில்லை.

அதிகாரத்தில் இருப்பவர்களால் மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

இவற்றை எல்லாம் மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்த அதே புத்திஜீவிகள் ஒரு சில வாரங்களில் நடத்திய மேலதிக ஆராய்ச்சிகளின் மூலம், கச்சேரியால் கையாளப்பட்ட மேலும் 12 திட்டங்களுக்கும் இதே கதி எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

மக்களுக்காக அரசு ஒதுக்கும் நிதிகள் மக்களுக்குப் பயனளிக்காமலும் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யாமலும், வீணாக்கப்படுவதும், திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்படுவதும் கச்சேரியால் மட்டுமல்ல!

இன்னும் மிகப்பெரிய அளவில் மாகாண சபையிலும்- சி.வி.விக்கினேஸ்வரன் முதல் அமைச்சராக இருந்த 5 வருட காலத்திலும் இதையே செய்தார்கள்.

அரசு மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கிய நிதியை கையாளுவதிலும் திட்டங்களை அமுல்படுத்தும் போதும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறுதலும் இல்லாததால் நாம் இதுவரை கண்டறிந்த மோசடிகள் ஒரு பனிப்பாறையின் நுனி மட்டுமே. கண்டறியாதது மிகப் பெரிய அளவாக இருக்கும் எனலாம். பழிவாங்கலற்ற, பக்கச்சார்பற்ற விசாரணை நிச்சயம் தேவைப்படுகிறது.

இனிவரும் நிதிகளுக்கும் திட்டங்களுக்கும் இந்தக்கதி ஏற்படாமலிருப்பதற்கான வழி முறைகளை உருவாக்கவேண் டும். செயல்திறனற்ற, பொறுப்பை ஏற்கமுடியாத அதிகாரிகளால் மக்களுக்கு எந்த வித பயனுமில்லை. எமது நாட் டீல் எல்லாத்துறைகளிலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். தொழினுட்ப நிறுவனங்கள் (Industrial Technology Institute) மட்டுமல்ல இதற்கென ஒரு அமைச்சுக்கூட (விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சு) இருக்கிறது. ஆகவே தொழில் நுட்ப அறிவும் அனுபவமும் இல்லாத யாழ் மாவட்ட செயலக அதிகாரிகளுக்கு தொழினுட்பம் நிறைந்த "பால் பதப்படுத்தும்" தொழிற்சாலையை உருவாக்கும் பொறுப்பை ஒருபோதும் கொடுத்திருக்கக் கூடாது என்பது எனது கருத்து.

இவை எல்லாவற்றையும் மக்கள் அவதானிக்கவும், கேள்விக்குட்படுத்தவும், கிடைக்கும் நிதி முழுவதையும் மக்களின் நலன்களுக்காகவும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் அதிகாரிகளை செயற்பட வைப்பதே யாழ் பிர ஜைகள் ஒன்றியத்தின் நோக்கம்.

மக்களுடைய நல்வாழ்வுக்கு ஏற்ற சகல விடயங்களிலும் அக்கறையுடன் செயற்படுவதும் இதில் அடங்கும்.

**யாழ் பிரஜைகள் ஒன்றியத்தின் அம்சங்களும் வேலைத்திட்டமும்:**

- இந்த ஒன்றியம் மக்கள் மயப்படுத்தப்பட்டது.
- ஜனநாயகமாக செயற்படுவது.
- சமத்துவமாக செயற்படுவது.
- பாலியல், சாதி, மத, இன வேறுபாடின்றி செயற்படுவது.
- கட்சி அரசியலின்றி செயற்படுவது.
- மாவட்டத்தில் நடக்கவிருக்கும் எல்லாத்திட்டங்களும் மக்களின் ஆலோசனையுடனேயே செய்ய வைப்பது.
- பசி, பட்டினி, பஞ்சம், தொழிலின்றி இளைஞர்கள் அலைவது அல்லது வெளிநாடுகளுக்குப் போவது, சுற்றுச் சூழல் மாசடைவது, காணியின்றி, இருக்க வீடின்றி அல்லற்படுவது போன்ற அடிப்படைப் பிரச்னைகளுக்கு அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் பொறுப்பேற்கச் செய்வது.
- எமது மாவட்டத்தில் உருவாக்கப்படும் எல்லா அபிவிருத்தித்திட்டங்களும் சம்பந்தப்பட்ட மக்களுடைய தேவைகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய ஆதரவைப்பெற்றதாகவும் இருக்கும்படி செயற்படுவோம்.
- திட்டமிட்டு செயற்படக்கூடிய, அனுபவமுள்ள, ஆளுமையுள்ள, செயற்றிறனுள்ள, பொறுப்புள்ள, நிதியை சரியாகக் கையாளத்தெரிந்த, மக்களுக்குச் சேவைசெய்யும் மனப்பாங்குள்ள, ஊழலற்ற உத்தியோகஸ்த்தர்களுக்கு மட்டுமே இத்திட்டங்களை வழிநடத்தும் பொறுப்பை கொடுப்பதற்கு ஆவன செய்வோம். அனுமதி கிடைத்தால் மக்கள் சார்பில் திட்டங்களைப்பார்வையிட்டு எமது அவதானிப்புகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பகிர்வோம்.
- எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் மாவட்டத்திற்கான முதன்மைத்திட்டமொன்றின் அடிப்படையிலேயே உருவாக்கச்செய்வது.

மேற்கூறிய நோக்கங்களுக்காக செயற்பட விரும்பியவர்கள் எல்லோரும் இந்த ஒன்றியத்துடன் இணைந்தால் தான் ஒரு மக்கள் இயக்கமாக செயற்பட முடியும். அனைவரும் ஒன்றிணைந்தால் எதையும் சாதிக்க முடியும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

| | | |
|---|---|---|
| 23) | 5000*l* | 2 புள்ளிகள் |
| 24) | 2m45cm / 245cm | 2 புள்ளிகள் |
| 25) | ரூபாய் 175.00 | 2 புள்ளிகள் |
| 26) | 23km 140m | 2 புள்ளிகள் |
| 27) | 102 | 2 புள்ளிகள் |
| 28) | 163,172 | 2 புள்ளிகள் |
| 29) | 21, 35, 49, 77 | 2 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| 30) 2 | 40) 3 | 50) 3 |
| 31) 3 | 41) 2 | 51) 2 |
| 32) 1 | 42) 2 | 52) 1 |
| 33) 1 | 43) 3 | 53) 3 |
| 34) 3 | 44) 2 | 54) 2 |
| 35) 1 | 45) 2 | 55) 2 |
| 36) 3 | 46) 3 | 56) 1 |
| 37) 2 | 47) 1 | 57) 3 |
| 38) 1 | 48) 2 | 58) 2 |
| 39) 2 | 49) 1 | 59) 3 |


(30 புள்ளிகள்)



60) பொருத்தமான வாக்கியங்கள் (06 புள்ளிகள்)


| | |
|---|---|
| 1 – 15 | 30 புள்ளிகள் |
| 16 – 29 | 32 புள்ளிகள் |
| 30 – 59 | 30 புள்ளிகள் |
| 60 | 06 புள்ளிகள் |
| உறுப்பெழுத்து | 02 புள்ளிகள் |
| மொத்தப்புள்ளிகள் | **100** |


❖ **1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

❖ **1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவைப் பூரணப்படுத்த பொருத்தமான உருவைத் தெரிவு செய்க?**

01) 


1)  2)  3) 


02) 




1)  2)  3) 

❖ **03, 04 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.**

03) 

1)  2)  3) 

04) 

1)  2)  3) 

05) ஆரம்பத்தில் தரப்பட்ட சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான சோடிச் சொல்லைத் தெரிவு செய்க?

**கதை வளர்த்தல் - பேச்சை விரித்தல்**

1) ஆறப்போடுதல் - பிற்போடுதல்
2) அருமை பெருமை – உயர்வு தாழ்வு
3) நகமும் சதையும் - ஒற்றுமை

06) புதுமை, பத்திரிகை, தங்கம், கார்மேகம், ஆகாயம் ஆகிய சொற்களில் ஒரு சொல்லிலிருந்து ஒரு எழுத்தை மட்டும் தெரிவு செய்து உருவாக்கக்கூடிய சொல்?

1) புத்தகம் 2) பத்திரம் 3) பதக்கம்

# இலங்கையின் வீழ்ச்சிக்கு இன முரண்பாடே காரணம்

## பாராளுமன்றில் ரிஷாத் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.25

**இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்ட தனாலேயே, போர் முடிவடைந்தும் இந்த நாடு இன்னும் முன்னேற்றம் அடையாதிருப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் பாராளுமன்றத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பாக ஒரு விடயத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது, இனங்களுக்கிடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதன் மூலமே இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இனங்களுக்கிடையே நல்லுறவும், முறையான சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, மதங்களுக்கு மதிப்பளிப்பதன் காரணமாகவே அந்த நாடுகள் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளன.

இலங்கையிலே அத்தனை வளங்கள் இருந்த போதும், இனங்களுக்கிடையிலே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டதனாலேயே, முப்பது வருட யுத்தம் இடம்பெற்றது. அது போன்று, கடந்த பத்து வருடங்களாக முஸ்லிம்களை குறிவைத்து தாக்குதல் மற்றும் அடாவடித்தனங்கள் இடம்பெற்றன.

இதன் தொடர்ச்சியாகவே, பயங்கரவாதி சஹ்ரானின் கேடுகெட்ட செயல்களால் சமூகங்கள் மேலும் துருவப்படுத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழு அறிக்கையின்படி தாக்குதலுக்கான பத்துக் காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

பயங்கரவாதிகள் கூறிய காரணங்களை ஏற்றுக்கொண்டு, அதனை நான் இங்கு நியாயப்படுத்த வரவில்லை. இந்தத் தாக்குதலில் சூத்திரதாரி உட்பட இதில் ஈடுபட்டவர்கள், உதவி செய்தவர்கள் அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

அந்த ஆணைக்குழு அறிக்கையில், முதலாவது இடத்தில் சொல்லப்பட்டவாறு அல்லாஹ்வை ஏசியதாலும், மூன்றாவது இடத்தில் சொல்லப்பட்டவாறு "அல்லாஹ் மீண்டும் பிறப்பார்" என்று ஞானசார தேரர் கூறுகிறார் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான ஒருவரை "ஒரே நாடு - ஒரே சட்டம்" செயலணிக்கு தலைவராக நியமித்திருக்கின்றார்கள். எனவே, அந்தச் செயலணியின் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்கி, சிறந்த மதகுரு ஒருவரை அல்லது புத்திஜீவி ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கோருகின்றேன்" - என்றார். (இ)

## சட்டவிரோதமாக 200 துப்பாக்கிகள்

கொழும்பு, நவ. 25

மாத்தளை மாவட்டத்தில் பதிவு செய்யப்படாமல் விவசாயிகளிடம் உள்ள துப்பாக்கிகள் தொடர்பான விபரங்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலாளர் கே.பெரேரா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மாத்தளை மாவட்டத்தில் விவசாயக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மாவட்ட செயலாளர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக விவசாயிகள் பயன்படுத்தி வரும் துப்பாக்கிகளில் பல இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத சுமார் 200 துப்பாக்கிகள் லக்கல பிரதேசத்தில் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதிவு செய்யப்படாமல் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது சட்டவிரோத செயலாகும். எனவே, பதிவு செய்யப்படாத துப்பாக்கிகளைத் தேடிக் கண்டுபிடித்து அதனைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார். (இ)

## மேல் மாகாணத்தில் கடும் சோதனை 6 ஆயிரத்து 324 பேருக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 25

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கான விசேட சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மதியம் 3 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் 1,475 பொலிஸார் இணைந்து சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 23 ஆயிரத்து 193 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் 6 ஆயிரத்து 324 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 823 பொது இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முகக்கவசம் அணியாது வீதிகளில் பயணித்த 4 ஆயிரத்து 351 பேருக்கு முகக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

918 போக்குவரத்து பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 3 ஆயிரத்து 328 மோட்டார் சைக்கிள்களும், 3 ஆயிரத்து 777 ஓட்டோக்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (இ)

## பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒரு மாற்று வழியே

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு, நவ. 25

"இலங்கைக்காக சர்வதேச நாணய நிதியத்தின் கதவுகள் திறந்தே உள்ளன. ஆனால், பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இதுவே ஒரே வழி என்பதை இலங்கை ஏற்காது. இதுவொரு மாற்று வழி மாத்திரமே."

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

"பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இலங்கை ஏன் இன்னும் சர்வதேச நாணய நிதியத்தை நாடவில்லை. கடுமையான நிபந்தனைகளா இதற்குக் காரணம்?" என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ் கூறியதாவது:-

"சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதென்பது ஒரு மாற்று வழி மாத்திரமே. அங்கு இலங்கைக்கு எந்நேரமும் செல்லலாம். கதவு திறந்தே உள்ளது.

எமது நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அந்த நாடுகள் அனைத்தும் சர்வதேச நாணய நிதியத்தை நாடவில்லை. ஏனைய சில மாற்று வழிகளும் உள்ளன. இலங்கையானது இந்த அழைப்பை ஏற்கவும் இல்லை. நிராகரிக்கவும் இல்லை" - என்றார்.



அதேவேளை, இது தொடர்பில் மேலதிக விளக்கத்தை வழங்கிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி.,

"எமது நாடு பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. ஆனால், பொருளாதாரப் பிரச்னைகளிலிருந்து எம்மால் மீள முடிந்ததா? அல்லது சர்வதேச நாணய நிதியத்தை நாடி பிரச்னைகளை முழுமையாகத் தீர்த்துக்கொண்ட நாடுகள் எவை என்பதை, சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு கூறுபவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்" - என்றார். (இ)

## சட்டவிரோதமாகவே கிண்ணியாவில் இழுவைப் படகு சேவை முன்னெடுப்பு

### நகர சபையின் தலைவரே பொறுப்பு என்கிறது அரசு

கொழும்பு, நவ. 25

கப்பல் பாதை விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு கிண்ணியா நகர சபையே பொறுப்புக்கூறவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"கப்பல் பாதை சேவையை முன்னெடுப்பதற்கு கிண்ணியா நகர சபை எம்மிடம் அனுமதி கோரியிருந்தாலும் அதற்கு நாம் அனுமதி வழங்கவில்லை. அவ்வாறான சேவையை முன்னெடுக்க வேண்டாம் எனத் திட்டவட்டமாக அறிவித்திருந்தோம்.

பாலம் அமைக்கப்படும் வரை மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு வலியுறுத்தினோம். இதன்படி மக்கள் மூன்றரை கிலோமீற்றர் தூரமான பாதையை பயன்படுத்தினர்.

இந்நிலையிலேயே சட்டவிரோதமான முறையில் குறித்த கப்பல் பாதை சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கிண்ணியா நகர சபையின் தலைவரே பொறுப்புக்கூற வேண்டும். இவர் இம்ரான் மஹ்ரூப் எம்.பியின் மச்சான் ஆவார். கிண்ணியா நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து உடன் நிறுத்தப்பட வேண்டும்" - என்றார். (இ)


## அனைத்து ஓட்டோக்களும் மீற்றர் ரக்ஸியாக மாற்றம்

கொழும்பு, நவ. 25

அனைத்து ஓட்டோக்களும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மீற்றர் ரக்ஸிகளாக மாற்றப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேல் மாகாணத்தில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். மூன்று மாத காலப்பகுதிக்குள் அனைத்துப் பிரதேசங்களிலும் இதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளி யிடப்படும். மீற்றர் இல்லாது வாடகை ஓட்டோக்களைச் செலுத்து வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" - என்றார். (இ)



# ஐன்ஸ்டீனின் கையெழுத்து பிரதி 260 கோடி ரூபாய்க்கு ஏலம்!

பாரிஸ், நவ. 25

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் எழுதிய சார்பியல் கோட்பாட்டின் கையெழுத்துப் பிரதி 260 கோடி இலங்கை ரூபாய்க்கு (13 மில்லியன் டொலர்) ஏலம் போனது.

பாரிஸில் உள்ள கிறிஸ்டி என்ற ஏல நிறுவனம், அல்பேர்ட் ஐன்ஸ் டீன் கைப்பட எழுதிய பிரதியை ஏலத்திற்கு விட்டது. அப்போது ஏராளமான நபர்கள் பிரதியை வாங்க ஆர்வம் காட்டினர். இறுதியில் அந்த சார்பியல் கோட்பாட்டின் கையெழுத்துப் பிரதி 13 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் போனது.

சார்பியல் கோட்பாடு நூல் 1913ஆம் ஆண்டு மற்றும் 1914 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஐன்ஸ்டீன் மற்றும் மைக்கல் பெஸ்ஸோ ஆகியோரால் இணைந்து எழுதப்பட்ட 54 பக்க கையெழுத்துப் பிரதி ஆகும்.

முன்னதாக இந்த கையெழுத்துப் பிரதியின் மதிப்பு 2.4 மில்லியன் முதல் 3.5 மில்லியன் டொலர்கள் என ஏல நிறுவனம் மதிப்பிட்டிருந்தது. (ஐ)

# தன்னைத் தானே திருமணம் செய்து விவாகரத்தும் செய்த மொடல் அழகி!



பிரேசிலியா, நவ. 25

பிரேசிலை சேர்ந்த மொடல் அழகியான கிறிஸ் கலேரா என்பவர் தன்னைத் தானே திருமணம் செய்தார். 3 மாதங்கள் கழிந்த நிலையில் தற்போது விவாகரத்து செய்துள்ளார்.

31 வயதான மொடல் அழகியான கிறிஸ் கலரா என்பவரே இவ்வாறு தன்னையே திருமணம் செய்து விவாகரத்தும் செய்துள்ளார்.

கடந்த காலங்களில் அவர் சந்தித்த காதல் மற்றும் மண முறிவுகளால் ஏற்பட்ட விரக்தியாலேயே அவர் தன்னைத் தானே திரும் செய்து கொண்டார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் பிரேசிலின் பிரபல தேவாலயம் ஒன்றில் தனக்குத்தானே மோதிரம் மாற்றி திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில் மூன்று மாதங்கள் கழித்து அவர் தன்னை விவாகரத்து செய்வதாக அறிவித்துள்ளார்.

இதற்கு, பொருத்தமான ஒருவரை சந்தித்ததால் காதல்மீது அதிகரித்த நம்பிக்கையே அவரின் இந்த விவாகரத்துக்கு காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இதுவரையான தன்னுடனான வாழ்வு இனிமையாக இருந்தது என்றும் அவர் கூறினார்.

## ஆசியா, ஐரோப்பாவில் தொற்றால்

# 2022 மார்ச் மாதத்துக்குள் 7 இலட்சம் பேர் பலியாகலாம்

ஜெனிவா, நவ. 25

ஐரோப்பாவிலும் ஆசியாவின் சில பகுதிகளிலும் அடுத்த ஆண்டு மார்ச்சுக்கு முன்னர் கொரோனா தொற்றால் 7 இலட்சம் பேர் பலியாகலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் ஐரோப்பா பிராந்தியத்தில் 53 நாடுகளை இணைத்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் தொற்றால் ஏற்கனவே 15 இலட்சம் பேர் உயிரிழந்து விட்டனர். இந்த நிலையில் 2022 மார்ச்சுக்குள் 52 நாடுகளில் 49 நாடுகள் தீவிர சிகிச்சை பிரிவில் மிகக்கடுமையான அல்லது மோசமான அழுத்தத்தை எதிர்கொள்ளலாம் என்று கணித்துள்ளது உலக சுகாதார ஸ்தாபனம்.

ஐரோப்பிய பிராந்தியத்தில் ஏற்படும் உயிரிழப்புகளின் முக்கிய காரணியாக கொரோனா வைரஸ் இருக்கிறது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டில் தெரிய வந்துள்ளது. எனினும், கொரோனாவைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய அரசாங்கங்கள் எடுக்கும் கட்டாய தடுப்பூசித் திட்டம், ஊரடங்கு போன்றவைகளை மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

முன்னதாக, ஐரோப்பாவில் மட்டும் 5 இலட்சம் பேர் தொற்றால் உயிரிழக்க நேரும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அமெரிக்காவின் ஜனநாயக மாநாடு

# 110 நாடுகளுக்கு அழைப்பு சீனாவுக்கு அழைப்பில்லை!

வாஷிங்டன், நவ. 25

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் டிசெம்பரில் நடைபெறும் ஜனநாயகம் குறித்த மெய்நிகர் உச்சிமாநாட்டில் பங்கெடுக்க 110 நாடுளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதில், முக்கிய மேற்கத்தேய நட்பு நாடுகள் உட்பட ஈராக், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவையும் அடங்கும். இதே நேரம் அமெரிக்காவின் பிரதான போட்டியாளரான சீனா, தாய்வான் என்பவை அழைக்கப்படவில்லை.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பீஜிங்கை மேலும் கோபப்படுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவைப் போலவே நேட்டோவில் உறுப்பினராக உள்ள துருக்கியும் பங்கேற்பாளர்களின் பட்டியலிலிருந்து விடுபட்டுள்ளது.

டிசெம்பர் 9-10ஆம் திகதிகளில் திட்டமிடப்பட்ட இணையவழி மாநாட்டில் இஸ்ரேல் மற்றும் ஈராக் மட்டுமே மத்திய கிழக்கு நாடுகள் என்ற வகையில் பங்கெடுக்கும்.

அமெரிக்காவின் பாரம்பரிய அரபு நட்பு நாடுகளான எகிப்து, சவுதி அரேபியா, ஜோர்தான், கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவை அழைக்கப்படவில்லை.

பிரேசிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பிரேசிலின் தீவிர வலதுசாரி ஜனாதிபதி, ஜெய்ர் போல் சனாரோ சர்வாதிகார வளைவு கொண்டவர் என்றும் டொனால்ட் டிரம்பின் உறுதியான ஆதரவாளராகவும் விமர் சிக்கப்பட்டு வந்தவர். (ஐ)

# ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஆஸியில் தடை



சிட்னி, நவ. 25

ஹிஸ்புல்லா அமைப்பின் அனைத்து பிரிவுகளையும் பயங்கரவாத அமைப்பாக அவுஸ்திரேலிய அரசாங்கம் பட்டியலிட்டுள்ளது. லெபனான் மீது கணிசமான அதிகாரம் செலுத்தி வரும் இந்த இயக்கத்தின் ஆயுத பிரிவுகள் மீதான தடையையும் அந்த நாடு நீடித்துள்ளது.

ஈரான் ஆதரவு கொண்ட ஷியா குழுவானது, அவுஸ்திரேலியாவிற்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும், பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவை வழங்குவதாகவும் உள்துறை அமைச்சர் கரன் அண்ட்ரூஸ் தெரிவித்தார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் ஒரு பகுதி அரசியல் கட்சியாகவும், ஒரு பகுதி ஆயுதக் குழுவாகவும் மற்றொரு பகுதி லெபனானின் ஷியா சமூகத்திற்கு அடிப்படை சேவைகளை வழங்கும் இயக்கமாகவும் செயல்படுகிறது. இஸ்ரேல் மீதான பல ஏவுகணை தாக்கு தல்களுக்கு ஹிஸ்புல்லா அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. உள்நாட்டுப் போர் முடிவடைந்ததில் இருந்து இன்றுவரை ஆயுதங்களை கைவிட மறுக்கும் ஒரே இயக்கம் இதுவாகும். (ஐ)

# பெகாசஸ் ஒட்டுக் கேட்பு; அப்பிள் நிறுவனம் வழக்கு

நியூயோர்க், நவ. 25

உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய உளவு மென்பொருளான பெகாசஸை தயாரித்த இஸ்ரேலின் என். எஸ். ஓ. நிறுவனம் மீது அமெரிக்காவின் கைபேசி தயாரிப்பு நிறுவனமான அப்பிள் வழக்கு தொடர்ந்துள்ளது.

முன்னதாக, பிரான்ஸைச் சேர்ந்த இலாப நோக்கமற்ற அமைப்பான பர்பிடன் ஸ்டோரிஸ் மற்றும் சர்வதேச மன்னிப்பு சபை ஆகியவை இணைந்து புலனாய்வு செய்து ஒட்டுக் கேட்பைக் கண்டுபிடித்தனர். உலகம் முழுவதும் அப்பிள் ஐபோன்களும் பெருமளவில் ஒட்டுக்கேட்கப்பட்டமை தெரியவந்தது.

இஸ்ரேலை சேர்ந்த என். எஸ். ஓ. நிறுவனத்தின் பெகாசஸ் ஒட்டுக்கேட்பு மென்பொருள் மூலம் இந்தியாவில் பத்திரிகையாளர்கள், நீதிபதிகள், எதிர்க்கட்சித் தலைவர்கள் கைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரத்தால் இந்தியாவில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் முடங்கியது.

இந்நிலையில்தான், உளவு மென்பொருளான பெகாசஸின் தயாரிப்பு நிறுவனமான இஸ்ரேலின் என். எஸ். ஓ. நிறுவனம்மீது அமெரிக்காவின் அப்பிள் நிறுவனம் வழக்கு தொடர்ந்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாண நீதிமன்றத்தில், ஐ போன்களை தயாரிக்கும் அப்பிள் நிறுவனம் தாக்கல் செய்துள்ள மனுவில், இஸ்ரேலின் என். எஸ். ஓ. நிறுவனம் தனது செயலிகளை ஐ போன்களில் சட்டவிரோதமாக நிறுவுவதற்கு தடைவிதிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. மேலும், தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடாக 75 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

அப்பிள் நிறுவனம் உலகம் முழுவதும் தங்களின் உபகரணங்கள் 165 கோடி அளவில் பயன்பாட்டில் உள்ளன என்றும் அதில் ஐபோன்கள் மட்டுமே 100 கோடி என்றும் தெரிவித்துள்ளது. இதனால் தங்களின் வாடிக்கையாளர்களை குறிவைத்து என். எஸ். ஓ. பெரும் சதி செய்துள்ளதாக அப்பிள் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால், இஸ்ரேலின் என். எஸ். ஓ. நிறுவனமோ உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களை குறிவைக்கும் பாலியல் குற்றவாளிகளையும், பயங்கரவாதிகளையும் கண்டுபிடிக்க அரசாங்கங்களுக்கு உதவும் செயலுக்காக மட்டுமே தாங்கள் பெகாசஸை உருவாக்கியதாக தொடர்ந்து தங்கள் தரப்பு நியாயத்தைக் கூறி வருகிறது. (ஐ)



# இந்திய அணி விளையாடும் போட்டி அட்டவணை வெளியீடு

புதுடில்லி, நவ. 25

இந்திய கிரிக்கெட் அணி, அடுத்த வருட ஜூலை வரை விளையாடவுள்ள ஆட்டங்கள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்திய அணி வீரர்கள் ஏற்கெனவே ஓய்வில்லாமல் விளையாடி வருகிறார்கள்.

அடுத்த வருட ஜூலை வரை அதே நிலைமை தான் நீடிக்கவுள்ளது.

- ■ இந்தியாவில் நியூசிலாந்து
- ■ இருபது -20 உலகக் கோப்பை முடிந்த பிறகு இந்தியாவில் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடிய இருபது - 20 தொடரில் 3-0 என முழுமையாக வென்றது இந்திய அணி. அடுத்ததாக இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.
- ■ டெஸ்ட் தொடர்
- ■ நவம்பர் 25 - முதல் டெஸ்ட், கான்பூர் டிசெம்பர் 3 - 2-வது டெஸ்ட், மும்பை
- ■ இந்தியா - தென்னாபிரிக்கா நியூசிலாந்து டெஸ்ட் தொடர் முடிந்தவுடன் இந்திய அணி தென்னாப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ஒருநாள், 4 இருபது -20 ஆட்டங்களில் விளையாடுகிறது.
- ■ டெஸ்ட் தொடர்
- ■ முதல் டெஸ்ட் - டிசெம்பர் 17, ஜொகன்னஸ்பர்க் 2ஆவது டெஸ்ட் - டிசெம்பர் 26, செஞ்சூரியன் 3ஆவது டெஸ்ட் - ஜனவரி 3 - கேப்டவுன்
- ■ ஒருநாள் தொடர்
- ■ முதல் ஒருநாள் - ஜனவரி 11, பார்ல் 2ஆவது ஒருநாள் - ஜனவரி 14, கேப்டவுன் 3ஆவது ஒருநாள் - ஜனவரி 16, கேப்டவுன்
- ■ இருபது -20 தொடர்
- ■ முதல் - ஜனவரி 19, கேப்டவுன் 2ஆவது- ஜனவரி 21, கேப்டவுன் 3ஆவது- ஜனவரி 23, பார்ல் 4ஆவது - ஜனவரி 26, பார்ல்
- ■ இந்தியாவில் மே. இ. தீவுகள் இந்தியாவில் 3 ஒருநாள், 3 இருபது -20 ஆட்டங்களில் விளையாடுகிறது மேற்கிந்தியத் தீவுகள் அணி.
- ■ ஒருநாள் தொடர்
- ■ முதல் ஒருநாள் - பெப்ரவரி 6, ஆமதாபாத் 2ஆவது ஒருநாள் - பெப்ரவரி 9, ஜெய்ப்பூர் 3ஆவது ஒருநாள் - பெப்ரவரி 12, கொல்கத்தா
- ■ இருபது - 20 தொடர்
- ■ முதல் ரி-20 - பெப்ரவரி 15, கட்டாக் 2ஆவது ரி- 20 - பெப்ரவரி 18, விசாகப்பட்டினம் 3ஆவது ரி-20 - பெப்ரவரி 20, திருவனந்தபுரம்
- ■ இந்தியாவில் இலங்கை
- ■ ஐ. பி. எல். போட்டிக்கு முன்பு இலங்கையுடன் டெஸ்ட், இருபது -20 தொடர்களில் இந்தியா விளையாடுகிறது.
- ■ டெஸ்ட் தொடர்
- ■ முதல் டெஸ்ட் - பெப்ரவரி 25, பெங்களூர் 2ஆவது டெஸ்ட் - மார்ச் 5, மொஹலி
- ■ இருபது -20 தொடர்
- ■ முதல் ரி-20 - மார்ச் 13, மொஹாலி 2ஆவது ரி-20 - மார்ச் 15, தர்மசாலா 3ஆவது ரி-20 - மார்ச் 18, லக்னோ
- ■ ஐ. பி. எல். 2022
- ■ இலங்கை தொடருக்குப் பிறகு ஏப்ரல், மே மாதங்களில் ஐ. பி. எல். போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதற்கான அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை.
- ■ இந்தியாவில் தென்னபிரிக்கா
- ■ ஐ. பி. எல். போட்டி முடிவடைந்த பிறகு தென்னாபிரிக்க அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து 5 ரி-20 ஆட்டங்களில் விளையாடுகிறது.
- ■ இருபது - 20 தொடர்
- ■ முதல் ரி-20 - ஜூன் 9, சென்னை 2ஆவது ரி-20 - ஜூன் 12, பெங்களூர் 3ஆவது ரி-20 - ஜூன் 14, நாக்பூர் 4ஆவது ரி-20 - ஜூன் 17, ராஜ்கோட் 5ஆவது ரி-20 - ஜூன் 19, தில்லி
- ■ இந்தியா - இங்கிலாந்து அடுத்த வருடம் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து ஒரு டெஸ்ட், 3 ஒருநாள், 3 ரி-20 தொடரில் இந்திய அணி விளையாடுகிறது. இரத்தான 5ஆவது டெஸ்ட் ஜூலை 1, 2022 அன்று எக்பாஸ்டனில் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- ■ டெஸ்ட் தொடர்
- ■ 5ஆவது டெஸ்ட் - ஜூலை 1, எக்பாஸ்டன்
- ■ இருபது -20 தொடர்ழு

முதல் ரி-20 - ஜூலை 7, ஏஜஸ் பௌல் 2ஆவது ரி-20 - ஜூலை 9, எக்பாஸ்டன் 3ஆவது ரி-20 - ஜூலை 10, டிரெண்ட் பிரிட்ஜ்

- ■ ஒருநாள் தொடர்
- ■ முதல் ஒருநாள் - ஜூலை 12, கியா ஓவல் 2ஆவது ஒருநாள் - ஜூலை 14, லார்ட்ஸ் 3ஆவது ஒருநாள் - ஜூலை 17, எமிரேட்ஸ் ஓல்ட் டிராபோர்ட்
- ■ 2022 இருபது -20 உலகக் கோப்பை
- ■ அவுஸ்திரேலியாவில் ஒக்ரோபர் 16 முதல் நவம்பர் 13 வரை

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட் வெற்றியை நோக்கி இலங்கை!

காலி, நவ. 25




இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி 52 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தடுமாறுகின்றது. இந்த நிலையில், இலங்கை அணி 296 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி கடந்த திங்கட்கிழமை காலியில் ஆரம்பமானது. முதல் இனிங்ஸில் இலங்கை 386 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு, தனது முதல் இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பெடுத்தாடிய போது - மூன்றாம் நாள் ஆட்டத்தில் மழை குறுக்கிட்டது. இதனால், ஆட்டம் பாதிக்கப்பட்டது. அப்போது, 224 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்த நிலையில் மேற்கிந்திந்தியா இருந்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்த ஆட்டத்தில், ஆட்டமிழக்காமல் இருந்த டா சில்வாவுடன் கப்ரியால் இணைந்து களமிறங்கினார். கப்ரியால் 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்கவே, மேற்கிந்தியத் தீவுகள் அணி 230 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இலங்கையின் பந்துவீச்சில் ஜெயவிக்கிரம 4, ரமேஷ் மெண்டிஸ் 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

156 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி.

தொடக்க வீரர் பதும் நிஷங்க 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும், அணித் தலைவர் திமுத் கருணாரத்ன அபாரமாக துடுப்பெடுத்தாடினார். அவருக்கு அஞ்சலோ மத்தியூஸ் துணையாக நின்றார்.

திமுத் கருணாரத்ன 104 பந்துகளில் 9 பௌண்ட்ரிகளுடன் 83 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார். அஞ்சலோ மத்தியூஸ் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 40.5 ஓவர்களில் இலங்கை அணி 191 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தி, துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை மேற்கிந்தியாவிடம் வழங்கியது.

348 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸில் களமிறங்கியது.

ஆனால், ரமேஷ் மெண்டிஸ், எம்புல்தெனிய ஆகியோரின் பந்துவீச்சை சமாளிக்க மாட்டாமல் மேற்கிந்தியா விரைவாக விக்கெட்களை பறிகொடுத்தது.

அந்த அணியின் பொன்னர் 18 ஓட்டங்களையும், டா சில்வா 15 ஓட்டங்களையும் பெற்றிருந்த நிலையில், போதிய வெளிச்சம் இன்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது மேற்கிந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கையின், ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்களையும், எம்புல்தெனிய 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் ஐந்தாம் நாளாகும். இன்றைக்குள் மீதமிருக்கும் 4 விக்கெட்களையும் இலங்கை அணி கைப்பற்றும் பட்சத்தில் இலங்கை அணி எளிதாக வெற்றி பெற்றுவிடும். எனினும், மேற்கிந்தியாவின் பொன்னர் - டா சில்வா இணை தற்காப்பு ஆட்டத்தை தொடர்ந்து இன்றைய நாளில் நிலைத்துவிட்டால் போட்டி சமநிலையில் முடிவடையலாம். (ஐ)

# நியூசிலாந்து - இந்தியா டெஸ்ட் இன்று ஆரம்பம்

புதுடில்லி, நவ. 25

நியூசிலாந்து - இந்திய அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் இன்று கான்பூரில் தொடங்குகிறது. இதில், ஸ்ரேயாஸ் ஐயர் டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகிறார். அத்துடன், ரஹானேவின் கிரிக்கெட் வாழ்க்கையை நிர்ணயிக்கும் தொடராகவும் இந்தத் அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் அணித் தலைவர் விராட் கோலி தலைமைக்குப் பதிலாக உப தலைவர் ரஹானே தலைமையில் களமிறங்குகிறது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்குப்பின் இந்திய அணி நியூசிலாந்துடன் டெஸ்ட் போட்டியில் விளையாடுவதால் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த டெஸ்ட் போட்டிக்கு முன்பாக அணித் தலைவர் ரஹானே நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில் “ நாளை (இன்று) தொடங்கும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஸ்ரேயாஸ் ஐயர் களமிறங்குகிறார். சமீபத்தில் நடந்து முடிந்த இருபது - 20 தொடரை நியூஸிலாந்துக்கு எதிராக 3-0 என்ற கணக்கில் இந்திய அணி வென்றுள்ளதால் மிகுந்த நம்பிக்கையுடன் தொடரை எதிர்கொள்கிறோம்” என்றார்.

ராகுலுக்கு காயம் ஏற்பட்டு டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார், விராட் கோலி, ரோஹித் சர்மா, ராகுல் ஆகிய 3 நட்சத்திர துடுப்பாட்ட வீரர்கள் இல்லாத சூழலில் இந்திய அணி களம் காண்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் டெஸ்ட் தொடருக்கு திரும்பியுள்ளார். ட்ரெண்ட் போல்டுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு ஜமிஸன், சௌதி, நீல் வோக்னர் சேர்க்கப்பட்டுள்ளனர். சுழற்பந்துவீச்சில் அஜாஸ் படேல், ரச்சின் ரவீந்திரா, சான்ட்னர் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர் இஸ் சோதி சேர்க்கப்படவில்லை. (ஐ)



# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை புதிய உப தவிசாளராக சுப்பிரமணியம்

வவுனியா, நவ. 25

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் புதிய உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சி.சுப் பிரமணியம் உறுப்பி னர்களின் ஆதரவுடன் சபை யால் நேற்று தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிர தேச சபையின் உப தவிசா ளரான மகேந்திரன் கடந்த மாதம் சுகயீனம் காரணமாக உயிரிழந்ததையடுத்து வெற் றிடமாகக் காணப்பட்ட உப தவிசாளருக்கான தெரிவு நேற் றுக் காலை சபையில் போட்டி க்கு விடப்பட்டது.

இதன்போது, ஈரோஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தி சசிதரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக சி.சுப் பிரமணியமும் போட்டியிட் டனர்.

சி.சுப்பிரமணியத்துக்கு ஆத ரவாக 16 வாக்குக்கள் கிடைக் கப்பெற்றன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஈரோஸ் அமைப் புக்கு மூன்று வாக்குக்கள் கிடைத்தன.

இன்று சபையின் 24 உறுப் பினர்கள் பிரசன்னமாகியிருந் தனர். அதில் 16 பேர் ஆதரவாக வாக்களித்தனர். ஐந்து பேர் நடு நிலையை வகித்தனர். ஐந்து பேர் சபைக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# முட்டையின் விலை உயர்வு

கொழும்பு, நவ. 25

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 25 ரூபாயாக உயர்வ டைந்துள்ளது எனத் தெரிவிக் கப்படுகின்றது.

கால்நடை தீவனப் பற்றாக் குறை காரணமாக முட்டை இவ்வாறு விலை உயர்வடைந் துள்ளது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங் கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (இ)

DAN CINE MARATHON

மாபெரும் குறும்படப் போட்டி

இது நமது திரைத்துறை
கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்

உங்கள் அணியினருடன் போட்டியில்
கலந்துகொள்ளத் தயாராகுங்கள்

Dan Cine Marathon குறும்படப் போட்டியில்
பங்குபற்றவிரும்பும் அணிகள் இன்றே உங்கள்
விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :

075 313 2901, 075 313 2932, 076 921 3686

# மரண அறிவித்தல்

மலர்வு 08 - 05 - 2017



உதிர்வு 24 - 11 - 2021

## செல்வி அஷேரா குயின்சன்

யாழ்ப்பாணம், கலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அஷேரா குயின்சன் 24.11.2021 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.11.2021 அன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

### தமிழர் விவகாரம் தொடர்பில்

# ஜேர்மனி தூதருடன் ரெலோ முக்கிய பேச்சு

கொழும்பு, நவ. 25



இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் ஹோல்கர் ஸூபேர்ட், உதவித் தூதுவர் ஓலாப் மல்ஷோ ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பங்காளிக் கட்சியான ரெலோ பேச்சு நடத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகத்தில் நேற்று முற்பகல் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் ரெலோவின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பின ருமான செல்வம் அடைக்கல நாதன், பாராளுமன்ற உறுப்பி னர் எஸ்.வினோநோகராதலிங் கம் மற்றும் ரெலோவின் ஊட கப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், ஐ.நா. 46/1 பிரே ரணை, பயங்கரவா தத் தடைச் சட்டம் நீக்கப்ப டல், ஜி.எஸ்.பி. வரிச் சலு கைகள், தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்க முக்கிய பிரச்னையான காணி அப கரிப்பு, இனக் குடிப்பரம் பல் சிதைப்பு என்பவற் றைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ. நா. பிரேரணையில் பரிந் துரைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நிறைவேற்றுவது, மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துவது சம்பந் தமாகக் கலந்துரையாடப் பட்டன.

தமிழர்கள் ஒருமித்த நிலைப் பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகளை வலியுறுத்துவது, அதன் முக்கியத்துவம், அதற் காக முன்னெடுக்கப்பட்ட நட வடிக்கைகள், அவற்றின் முன் னேற்றம், ஆதரவு தரப்புக்கள், எதிர்கால நகர்வுகள் என்பன பற்றியும் ரெலோ தரப்பால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடைபெற்றது. (இ)

# ஸ்ரான்லி வீதி புனரமைப்பு குறித்து மேயர் தலைமையில் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 25



யாழ். ஸ்ரான்லி வீதி புனர மைப்பு தொடர்பாக மாநகர மேயர் வி.மணிவண்ணன் தலை மையில் மாநகர சபையில் நேற்று விசேட கூட்டம் நடைபெற்றது.

இதில், யாழ். மாநகர சபை யின் ஆணையாளர், பொறியிய லாளர், வீதி அபிவிருத்தி அதி கார சபை, நீர் வழங்கல் வடி காலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை ரெலி கொம் ஆகியவற்றின் பொறி யியலாளர்கள் மற்றும் அதிகாரி களும், ஸ்ரான்லி வீதி புனர மைப்பு செய்யும் ஒப்பந்தகார நிறுவனத்தினரும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒப்பந்தக்கார நிறுவனத்தினரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், மேற் படி திட்டத்தை வரும் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் முடிவு றுத்திக் கொள்வதற்கு அனை வரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும், பொதுமக்க ளுக்கு அசௌகரியங்கள் ஏற் படுவதைக் குறைத்து வேகமாக செய்து முடிப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது.

ஸ்ரான்லி வீதியானது இரு பக்கமும் வாகனத்தரிப்பிடம், வாய்க்கால், நடைபாதை, சுற்று வட்டம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியவாறு புனரமைக் கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ)

# ஐந்து பிரதேசங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் அறுவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 25

ஐந்து இடங்களில் இடம் பெற்ற விபத்துக்களில் அறுவர் மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக் கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக களுத்துறை, பதுருளிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திக்ஹேன வீதி, போல்லுன்ன பிரதேசத்தில், மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து எதிர்த் திசையில் வந்த லொறியொன் றில் மோதி விபத்துக்குள்ளாகி யுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்து நர் நாகொடை வைத்தியசாலை யில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். பதுருளிய பிரதேசத்தை சேர்ந்த 36 வயது நபரே உயிரிழந்தார்.

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவு, கொழும்பு - காலி வீதி, தோட்பல சந்திக்கு அருகில், பஸ்ஸொன்று பாதசாரி ஒருவர் மீது மோதியதில் பாதசாரி மரணமடைந்தார். அஸ்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே உயிரிழந்தார்.

கொழும்பு, நீர்கொழும்பு வீதி - வெலிகம்பிட்டிய பிர தேசத்தில் கொழும்பு நோக்கிப் பயணித்த கொள்கலனென்று மோட்டார் சைக்கிளொன்றின் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்து நர் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரண மடைந்தார். கனேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயது நபரே உயிரிழந்தார்.

பொலனறுவை, மனம்பிட் டிய வீதியில், டிப்பர் ரக வாகன மொன்று ஓட்டோ ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளானதில் இருவர் மரண மடைந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க் கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் ஓட்டோ சாரதியும், ஓட்டோவில் பய ணித்த நபருமே உயிரிழந்தனர்.

குருநாகல், ஜயந்திபுர வீதி, படுமக பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று மின்சாரத் தூணொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகி யுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்து நர் குருநாகல் வைத்தியசாலை யில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரே உயிரிழந்தார். (இ)

ஈழநாடு
Eelanadu

# அரசின் துருப்புச்சீட்டு இனவாதம் மாத்திரமே

## சபையில் சாடினார் கிரியெல்ல



கொழும்பு, நவ. 25

**“இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அரசின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே. அதுமட்டுமன்றி ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற ஜனாதிபதி செயலணி மூலம் நாட்டுக்குத் தீ வைக்க அரசு முடிவெடுத்துள்ளது.”**

- இவ்வாறு எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. சாடினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இவ்வாறு சாடிய அவர் மேலும் கூறுகையில்,

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏன் எமக்கு இன்னமும் வழங்கவில்லை? சமல் ராஜபக்ஷ உபகுழு அறிக்கையை எமக்கு வழங்க முடியுமா முடியாதா? பிரதமர் சபையில் உள்ளார். அவரிடமே இவற்றைக் கேட்கின்றோம். ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மாற்றப்பட்டு புதிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஒவ்வொருவரை இலக்குவைத்து அவர்களைத் தெரிவு செய்து வழக்குத் தொடுக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முதலில் தகவல் தெரிந்தவர் மீது வழக்குத் தொடுக்கப்படாது அப்போதைய ஜனாதிபதியைக் குற்றவாளியாக்குவதன் மூலமாக இந்த வழக்குத் தோற்கடிக்கப்படும். அதுமட்டுமல்ல ஒரு சிலரது தகவல்களை அரசு அழித்துவிட்டது. ஆகவே, நீதிமன்றத்தை மிதித்துக்கொண்டு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாது.

இதேவேளை, சகல அமைச்சுகளுக்கும் செயலணிகள் உருவாக்கப்பட்டு அமைச்சரவையைப் பலவீனப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி சகல அதிகாரங்களையும் செயலணிகளை வைத்துக் கொண்டு இயக்கி வருகின்றார். அதேபோல் ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி நாட்டுக்குத் தீ வைக்க முடிவெடுத்துள்ளனர். இனவாதத்தை உருவாக்கி நாட்டைத் தீ வைக்கவே அரச தரப்பினர் நினைக்கின்றனர். இந்த அரசுக்கு இனவாதத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அவர்களின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே. அதனைத்தான் அவர்கள் முன்னெடுக்கின்றனர்” - என்றார். (இ)

# புதையல் தோண்டிய நால்வர் கைது!

கொழும்பு, நவ. 25

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலனறுவை, அரலங்க வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேஹெரகமவில் அப் பிரதேசத்தைச் சேர்ந்த 21, 26, 38, 59 வயதுகளையுடையவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக் கப் பெற்ற இரகசிய தகவலை யடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை மகேஸ்வரி

கோணாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை மகேஸ்வரி நேற்று (24.11.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் செல்வமகாலட்சுமி (ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி - கரவெட்டி தெற்கு, மேற்கு உப அலுவலகம், உடுப்பிட்டி), காலஞ்சென்ற ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் சிவம், மதனமோகன் ஆகியோரின் மாமியும் Dr.துளசி, Dr.காயத்திரி, Dr.ஜனனி, ஜனகன், கஸ்தூரி ஆகியோரின் பேர்த்தியும் இராசலட்சுமி, துரைராசா, லீலாவதி, காலஞ்சென்றவர்களாக கணபதிப்பிள்ளை, தங்கமுத்து, கமலாதேவி, இராஜரட்ணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2021) வியாழக்கிழமை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவரசம்திட்டி மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.சிவம்**
**(மருமகன் - சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை)**

# தொலைபேசி அழைப்புக்களுக்கு வடக்கு ஆளுநர் பதிலளிப்பதில்லை

## பிரதமரிடம் சிறிதரன் எம்.பி. முறையீடு

கொழும்பு, நவ. 25

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் எம்.பிக்களான எம்மால்கூட தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட எம். பி. சி. சிறிதரன் முறையிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு முறையிட்ட அவர் மேலும் கூறுகையில்,

“கிளிநொச்சி மாவட்டத்தின் சில பிரச்னைகளைப் பேசுவதற்காக வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநரான ஜீவன் தியாகராஜாவுடன் பேசுவதற்காகப் பல தடவைகள் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தேன். ஆனால், அவர் எனது அழைப்புக்களுக்குப் பதிலளிக்கவில்லை.

வடக்கு மாகாணத்தின் ஆளுநர்களாக இருந்த திருமதி சார்ள்ஸ் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் நாம் எந்தவேளையில் தொலைபேசி அழைப்பு எடுத்தாலும் உடனடியாகப் பதில் வழங்குவார்கள்.

ஆனால், ஜீவன் தியாகராஜா எமது தொலைபேசி அழைப்புக்களுக்குப் பதிலளிப்பதில்லை என்பதை இங்குள்ள பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்” - என்றார். (இ)

# அறநெறி பாடசாலைகள் 28ஆம் திகதி மீளத்திறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 25

கொரோனா பேரிடர் காரணமாக மூடப்பட்டிருந்த நாட்டிலுள்ள அறநெறிப் பாடசாலைகளை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் சுகாதார நெறி முறைக்கிணங்க மீளத் திறக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அறநெறிப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் ஆரம்பிப்பதற்கு வசதியாகப் பெற்றோர், அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர், பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எனவே சகலரும் உரிய சுகாதார நடை முறைகளைக் கட் டாயம் பின்பற்ற வேண்டும் - என்றார். (இ - 03)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கதகளி, 2.0 திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஸ்ரீ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்